விலை ரூபா: 5.00 பக்கங்கள்:- பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 14 வியாழக்கிழமை (28.03.2002) தொலைபேசி 3378 ஒலி 99



## புரிந்துணர்வு ஒப்பந்தம் விளையாட்டுப் போட்டியில் விடப்படும் இடைவேளை

# புலிகளைத் தோற்கடிக்க அரசு தயாராகி வருகிறது

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை சகல வழிகளிலும் தோற்கடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகக் கருத்திட்ட அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட நிரந்தர போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் விடப்படும் இடைவேளை போன்றதென வர்ணித்த அமைச்சர் இப்போர்நிறுத்த இடைவேளை முடிவடையும் போது விடுதலைப் புலிகளை சகல வழிகளிலும் தோற்கடிக்கத் தேவையான ஆயத்தங்களை அரசாங்கம் செய்துள்ளதென்று அவர் உறுதிப்படத் தெரிவித்தார். வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு இவ்வாறு உரையாற்றிய அமைச்சர் ராஜித அங்கு மேலும் பேசுகையில்:-

விடுதலைப் புலிகளின் கடற்படை அணி சர்வவல்லமை பொருந்திய உயர் படையணியாக விளங்குகிறது. இந்நிலையில் ஸ்ரீலங்கா

(10ம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் நிகழ்வு ஏப்ரல் 17ந் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சமூகம் அடுத்த மாதம் 17ந் திகதி பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை நடத்தத் திட்டமிட்டுள்ளது. கடந்த வருடம் ஜனவரி மாதம் இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியில் 1வது பொங்கு தமிழ் நிகழ்வு மிகவும் எழுச்சியுடன் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

மீண்டும் மற்றொரு பொங்கு தமிழ் எழுச்சிக்காக தயாராகி உள்ள யாழ் பல்கலைக்கழக சமூகம் இதற்கான ஏற்பாடுகளில் மிகவும் முனைப்பாக ஈடுபட்டுள்ளது

(2ம் பக்கம் பார்க்க)

## 34வாக்குகளால் வ.செ.தி நிறைவேறியது

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முதலாவது வரவுசெலவுத் திட்டம் 34 அதிகப்படியான வாக்குகளால் நேற்றுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (வ)

## தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டால்

# அரச- புலிகள் பேச்சு மே முதல் வாரத்தில்

### அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இப் பேச்சுவார்த்தையின் போது தமிழீழக் கோரிக்கை தவிர்ந்த ஏனைய கோரிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியா ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்று தகவல் திணைக்களத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்று நடைபெற்றது. இம்மாநாட்டிலேயே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மே மாதம் முதல்வாரத்தில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் கெல்ஹீசன் அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார். கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனும் ஏனைய தலைவர்கள், தளபதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி சமாதான முன்னெடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளவே வன்னி வந்துள்ளார்.

புலிகளுடனான சமாதானத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை மே மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் பீரிஸ் தெரிவித்தார். அப்போது செய்தியாளர் ஒருவரால் புலிகளின் தடை நீக்கப்படுமா என்று கேட்கப்பட்ட போது அதற்கு பதில் அளித்த பீரிஸ் தமிழீழக் கோரிக்கையைத் தவிர ஏனைய விடயங்களில் விட்டுக் கொடுத்து செயற்பட அரசு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார் (வ.5)

## வன்னி சென்ற நோர்வேக்குழு கொழும்பு திரும்பியது

(கொழும்பு)

வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்திய நோர்வேயின் சமாதானக் குழுவினர் நேற்றுக் கொழும்பு போய்ச் சேர்ந்தனர்.

விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோரே கொழும்பு போய்ச் சேர்ந்தவர்களாவர்.

(2ம் பக்கம் பார்க்க)

## மூன்று அமைச்சர்கள் இன்று யாழ் வருவர்!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பாக நேரில் அறிந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ, உளத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா, புனர் வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா ஆகியோருடன் 30ற்கு மேற்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள், 25க்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் அமைச்சர்களின் (2ம் பக்கம் பார்க்க)



கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் நேற்றைய தினம் துப்புரவு செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்

## கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று உணர்வு பூர்வமான அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வை முன்னிட்டு யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்து பற்றைக்காடாக மாறியிருந்த இப்பகுதி யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவக மாணவர்கள், தென்மராட்சி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதி எங்கும் சிவப்பு மஞ்சல் கொடிகள் கட்டப்பட்டு அப்பகுதி பெரும் எழுச்சிக்கோலம் பெற்றுக் காணப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான நேரடிப் பேச்சுக்கு ஜனாதிபதி பாராட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நேரடிப்பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதாக அறிவித்திருப்பதை ஜனாதிபதி சந்திரிகா பாராட்டியுள்ளார்.

பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பேச்சுவார்த்தைக்கு அரசு தயார் என்று கூறியதை அடுத்தே ஜனாதிபதி தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக ஜனாதிபதி விடுத்த அறிக்கையில் பொ.ஜ.முன்னணி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைக்காகவும், நலனுக்காகவும் பாடுபட்டு வந்துள்ளது.

பொஜமுன்னணி 1994ல் ஆரம்பித்த சமாதான முயற்சியையே இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இது எனக்கு(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6இல்இருந்து11வரையான பாடங்கள் சிறந்த ஆசிரியர்கள் மூலம் வகுப்பில் 15 மாணவர்கள் மட்டும். மாணவர்கள் பதிவுக்கு தலைமை ஆசிரியர் 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4891)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து நியாயவிலையில் 24மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். 61 இராமநாதன் வீதி (மிலேனியம் பாருக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4874)

### தேவை

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட உள்ள ஆடைத் தொழில் சாலைக்கு துணிவெட்டுபவர், தைப்பவர், பூவேலை செய்பவர் தேவை. அனுபவம் வாய்ந்தவர் பயிலுநர்கள் தங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி விளம்பர இல-241, மே/பா, வலம்புரி. (சி-3757)


## பங்குனி உத்தரம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் பங்குனி உத்தரத்தை யொட்டி இன்று காலை 9 மணி முதல் நடேசப் பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன. (உ-223)

# தேர்தல் கொடுப்பனவை யாழ்.வலயத்தில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடந்து முடிந்த பொதுத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்க் கோட்ட கல்விசார், கல்விசாரா ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் நேற்றைய தினம் வழங்கப்பட்டதுடன்,

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்றும், யாழ்ப்பாணக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளையும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, கொடுப்பனவைப் பெறத் தவறிய நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்தவர்கள் நாளை வரை பெற்றுக் கொள்ள முடியும்.

கொடுப்பனவுகளை காலை 9.00 மணி முதல் பி.ப.1.00 மணிவரை யாழ். வலயக் கல்விப்பணிமனைக் கணக்காளர் அலுவலகத்தில் காசாகப் பெற்றுக்கொள்ளலாம் என கணக்காளர் து.துரைசிங்கம் அறிவித்துள்ளார். (உ-19-7)

## இளங் கலைஞர் மன்றத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழாவின் ஆறாம் நாளான இன்று காலை 9.00 மணி முதல் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள், பாட்டு, வீணை இசை, நாதாஞ்சலி ஆகியனவும் பி.ப 4.00மணி முதல் பாட்டு, இசைக்கச்சேரி ஆகியனவும் நடைபெறவுள்ளன. (உ-3)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டவேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்குசங்கஅலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தொழில்அமைச்சர்,வேலையற்ற பட்டதாரிகளின் விபரங்களை சேகரிக்கவுள்ளதனால் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத வேலையற்றபட்டதாரிகள் பதிவு செய்யவிருப்பின் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் மு.ப 10 மணிமுதல் 1.00 மணி வரை இல: 34 மாரியம்மன் வீதி திருநெல்வேலியிலுள்ள சங்க அலுவலகத்தில் பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பொங்குதமிழ்

யாழ்குடாநாட்டு அனைத்து மக்களையும் நிகழ்வில் ஈடுபடுத்தி, பிரமாண்டமான ஏற்பாட்டுடன், பாரியநிகழ்வாக இப்பொங்கு தமிழ் நிகழ்வை எழுச்சிகொள்ளச் செய்ய, பொது அமைப்புகள் மற்றும் அரசியற் தலைவர்களை இணைத்து நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (இ)

மத்தியமாகாண சபையின்

# வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டது

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் இந்த வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் 8 மேலதிக வாக்குகளால் நேற்று முன் தினம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மத்தியமாகாண சபையின் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க வரவு செலவுத்திட்டத்தைசபையில் சமர்ப்பித்த பொழுது அதற்கு ஆதரவாக 22 பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

எதிராக ஐக்கிய தேசியக் கட்சிஉறுப்பினர்கள்22பேரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் 6 பேரும் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 2 பேரும் வாக்களித்தனர்.

ஜே.வி.பி. இந்தவாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை,மாகாணசபையின் எதிர்கட்சித் தலைவர் திஸநாயக்கா தம்மை முதலமைச்சராக்கக்கோரி உயர்நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே. (உ-5)

## மூன்று

உயர் அதிகாரிகளும் இன்று வருகிறார்கள்.

இன்று காலை வரும் இக்குழுவினர் தென்மராட்சி, காங்கேசன்துறை, பருத்தித்துறைதுறைமுகம், யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் சுன்னாகத்தில்உள்ள அகதிமுகாம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இதனையடுத்து அமைச்சர் அதிகாரிகள் குழுவினர் பிற்பகல் 2மணிக்கு யாழ் செயலகத்தில் அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் மாநாடொன்று நடத்துவர்.

இம்மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு அரசசார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிரதேசசபைத் தலைவர்கள் பிரதேச செயலாளர்கள் மறறும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

## வன்னி சென்ற

இவர்களை கிளிதொச்சியில் வைத்து விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்.

இதேவேளை வன்னிசென்ற நோர்வேயின் சமாதான தூதுக்குழுவுடன் யாழ்-கண்டிவீதி திறப்பு, நேரடிப் பேச்சு வார்த்தைக்குமுன்ன்தானபுலிகள் மீதான தடைநீக்கம், நேரடிப்பேச்சு வார்த்தையை எப்போது எங்கு ஆரம்பித்தல் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சீரான முறையில் கடைப்பிடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டமை தெரிந்ததே. (இ-5-8)


கொட்டடி யாழ்ப்பாணம்
கற்குளம் அருள்மிகு ஸ்ரீ கருமாரிஅம்மன் ஆலய
நூதனப் பிரதிஸ்டா

## மகாகும்பாபிஷேகம்

காலம் -28,03.2002 வியாழன் காலை 4.24முதல் 6.09 மணி வரை

பிரதம குரு - பிரம்மஸ்ரீ கி. வைத்தீஸ்வரக் குருக்கள்

சமயச் சொற்பொழிவு - சொல்லின் செல்வர் இரா செல்வவடிவேல் ''சக்தி மகிமை''

சிறப்புரை - திருமதி அ.யோ. எழிலரசி கலாசார உத்தியோகத்தர் யாழ். பிர. செயலகம்

பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொட்டடி யாழ்ப்பாணம் (4893)

ஆலய பரிபாலன சபை அருள்மிகு ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயம்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள்

1 கலை முதற்தேர்வு 2000
2 வணிகமாணி பகுதி I 2000

மேற்படி பரீட்சைகள 22-04-2002 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் ஆரம்பமாகின்றன நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத்தில் 17-04-2002 முதல் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் 19.04-2002ம் திகதி முதல் வவுனியா வளாகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 1021-3612 (யாழ்ப்பாணம்) 024-22265 (வவுனியா) என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

(சி-3770)

பதிவாளர்
27.03.2002



## இந்துசமய விவகாரங்கள் அமைச்சு
## பனை அபிவிருத்திச் சபை

# பனைவளக் கண்காட்சியும், போட்டிகளும் - 2002

எதிர்வரும் சித்திரை மாதம் 7ம், 8ம், 9ம் திகதிகளில் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறவிருக்கின்ற பனைவளக் கண்காட்சியை முன்னிட்டு இடம்பெறும் போட்டிகள்.

01 பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

விடயம்:- பனைவளம்

மொழி:- தமிழ்

750-1000 சொற்களுக்கு உட்பட்டதாக அமையும் கட்டுரையை சம்மந்தப்பட்ட பாடசாலை அதிபர் ஊடாக 05.04.2002ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

02 பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி

விடயம்:- கற்பகதரு

மொழி: தமிழ்

சிரேஷ்ட பிரிவு:- O/L, A/L மாணவர்கள் நேரம்07நிமிடம்

கனிஷ்ட பிரிவு:- ஆண்டு 8தொடக்கம் ஆண்டு 10 வரையிலான மாணவர்கள் நேரம் 05 நிமிடம்

குறிப்பு:- போட்டி 05-04-2002ம் திகதி எமது தலைமையகத்தில் இடம்பெறும். விண்ணப்பங்கள் 04.04.2002ம் திகதிக்கு முன்னதாக எமது காரியாலயத்தில் கிடைக்கப்பெற வேண்டும்.

03. பனம் கைப்பணிப் பொருட்களுக்கான போட்டி (உற்பத்தியாளர்)

1. பனை ஓலைக் கைப்பணிப் பொருட்கள்
2. பனந்தும்பு உற்பத்திகள்
3. பனம்நார் உற்பத்திகள்
4. பனைமர உற்பத்திகள்

இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது பொருட்களை 3.4.2002 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை எமது மாவட்டக் காரியாலயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம், அல்லது பின்வரும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.

தலைமையகம்
53- கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-3771)

**தலைவர்**
பனை அபிவிருத்திச் சபை
244, காலிவீதி,
கொழும்பு.

## யாழில் ஹோட்டல் பயிற்சி பாடசாலை,

# அமைச்சர் காமினி லொக்குகே சம்பிரதாய பூர்வமாக திறப்பு

(தென்மராட்சி)

இலங்கை சுற்றுலாத் துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம் கட்டிடத்தில்சுற்றுலாத்துறை அமைச்சர் காமினிலொக்குகேயினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் புனர்வாழ்வு- புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் போதி ரணசிங்கா ரான்அமைப்பின் தலைவர் என். வாமதேவன், துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் உட்பட வேறும் பலர் சமுகமளித்திருந்தனர்.

இப் பாடசாலையில் ஹோட்டல் வரவேற்புப் பணி பற்றிய முதலாவது பயிற்சி நெறிநேற்றுமுன்தினமே ஆரம்பமாகியது. இப் பயிற்சி நெறிக்கு 30 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைபவத்தில்சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே உரையாற்றும் போது, உலகிலேயே மிகவும் பிரகாசமான துறைசுற்றுலாத் துறையாகும்.

இத்துறையையாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அபிவிருத்தி செய்ய நாம் முயன்று வருகின்றோம். அதன் மூலம் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு நல்ல தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். யாழ்ப்பாணமும் இலங்கையின் ஒருபகுதிதான். இப்பகுதியையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு எனக் சொன்னார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் அங்கு உரையாற்றினார்.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் நன்றியுரை நிகழ்த்தினார். (உ-77)

# மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை 17 இல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைமைக்கும் நோர்வே சமாதான தூதுக்குழுவினருக்குமிடையிலான மீண்டுமொரு சுற்றுப் பேச்சு வார்த்தை, அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தமிழ் நெற் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பேச்சு வார்த்தையில் நோர்வேயின் இராஜாங்க அமைச்சர்விடார் ஹெல்கிஸன், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது, இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான இறுதி முடிவுகள் எடுக்கப்படுமெனவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# திருநெல்வேலியில் திருட்டு விழிப்புணர்வு பிரசாரம்

## பொலிஸார் மேற்கொள்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பகுதியில், திருட்டுக்கள் பற்றிய விழிப்புணர்வுப் பிரசாரங்களை பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

முதல் கட்டமாக பலாலி வீதிப்பகுதியில் திருட்டு விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சைக்கிள் பாதுகாப்புமுறை பற்றியும், திருட்டுக்களை தடுக்க பொதுமக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் அவற்றில் விளக்கப்பட்டுள்ளன. (உ-19)

# பிள்ளைகளுக்கு கல்வியைத்திணித்து ஆளுமையைச் சிதைக்கிறார்கள்

## பல்கலை விவசாய விரிவுரையாளர்

(கோப்பாய்)

இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு ஆசிரியர் படிப்பிப்பதில் திருப்திப்படாது, பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு கல்வியைத்திணிக்க முயன்று அவர்களின் ஆளுமையைச்சிதைத்து வருவது வேதனைக்குரியது என்று யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் குணரத்தினம் திருக்குமரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் நாவலர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் பேசுகையில்; மூன்று வயதிலேயே புத்தகப்பையை பிள்ளைகளுக்கு பெரிய சுமையாக்கி பெற்றோர்கள் அவர்களை ரியுஷனுக்கு அனுப்பிவைப்பது குடாநாட்டில் சாதாரணமாக நிகழ்ந்து வருகிறது. தங்கள் பிள்ளைகளை மேல் நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்ற உந்துதலினால் அவர்கள் இப்படிச் செய்கிறார். ஆனால் இது வேதனைக்குரிய செயல் என்று குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் கே.வி.குணசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

ஆரம்ப பாடசாலைகளில் எல்லோராலும் கற்பிக்க முடியாது. ஆரம்ப கல்வி ஆசான்களின் நற் சிந்தனைகள் இன்றும் எனது காதில் ரீங்காரமிடுகின்றன. மூன்றாம் வகுப்பில் நாவலர் பெருமானைப் பற்றிப் பேசிய எனது கன்னிப் பேச்சு இப்போதும் என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. எனவே ஆரம்ப கல்வி கற்ற பாடசாலையை உயிரிலும் மேலாக மதிக்கவேண்டும்.

புள்ளிவிபர உத்தியோகத்தர் எஸ்.சிறீகரனும் உரையாற்றினார். (எ-79)

## புலிகள் பகுதியில் முஸ்லிம்கள் வேளாண்மை

முஸ்லிம் விவசாயிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வேளாண்மைச் செய்கைகளில் ஈடுபடும்போது ஏற்படும்பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்போவதாகவும்,

முஸ்லிம் விவசாயிகளுக்கு விடுதலைப் புலிகளால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாதென்றும் புலிகளின் மட்டு அம்பாறை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் விசு வாக்குறுதியளித்துள்ளார். (உ)

## ஆன்மீகப் பெருவிழா பிற்போடப்பட்டது

(கொழும்பு)

சர்வதேச இந்து மத குரு பீடத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர்களின் ஏற்பாட்டில், நல்லை ஆதீனத்தில் இன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆன்மீகப் பெருவிழா பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை இவ்விழா நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளதாக சர்வதேசஇந்துமதகுருபீடாதிபதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார். (உ)

# கிராம சேவையாளர் சங்கம் பிரயாணப்படியை அதிகரிக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

கிராமசேவையாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் பிரயாணப்படியாகிய 75 ரூபா போதாமல் இருப்பதால் அதனை அதிகரித்துத்தரல் வேண்டும் எனயாழ்.மாவட்ட கிராம சேவையாளர்கள் சங்கம் பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் ஏர்ஸ். குணசேகராவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிராமசேவையாளர்கள் ஒவ்வொரு மாதமும் தமது கடமை நிமித்தம் பலமைல் தூரம் பயணித்துவருகின்றனர். ஆயினும் அவர்களுக்கு வழங்கப்படும் பிரயாணபபடியோ மிகவும் குறைவாகும்.

இதேவேளை, அண்மையில் நியமிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பிரயாணப்படியாக மாதாந்தம் 250 ரூபா வழங்கப்படுகின்றது எனவும் சங்கத்தினால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் கிராம சேவையாளர்களுடைய அலுவலகங்களுக்கு தளபாடங்கள் வழங்கப்படல் வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது இவ்விதமிருக்க தென் பகுதியில் பணியாற்றுகின்ற அனேகமான கிராமசேவையாளர்களுக்கு சொந்தமாக அலுவலகங்கள் இல்லையெனவும், அவர்கள் அங்குகோவில்களிலியேயே தமது அலுவலகங்களைக்கொண்டுள்ளனர் எனவும் அமைச்சர் ஏர்ஸ்குணசேகராகுறிப்பிட்டார்.

(உ-77)

## கடிதங்கள் தேக்கம்

(செம்பியன்பற்று)

உபகதிர்காமத்தில் இயங்கி வரும் தாளையடி உப அஞ்சல் அலுவலகத்தில் மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு வந்த கடிதங்கள் உரியவர்களால் பெறப்படாது தேங்கிக்கிடப்பதாக மேற்படி உப அஞ்சல் நிலைய அதிபர் செல்விசுதா தெரிவித்துள்ளார். (எ-42)

# முகமாலைப் பகுதியில் 88 கொட்டில்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவக்கட்டுப்பாட்டு முன்னணிக் காவலரண் பகுதியில் சுமார் 88 கொட்டில்கள் துரிதகதியில் அமைக்கப்பட்டு வருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி - யாழ் கண்டி வீதியை (ஏ-9 பாதை) பயணிகள் போக்குவரத்துக்கு திறந்து விடுவதற்கு வசதியாகவே மேற்படி 88 கொட்டில்கள் முகமாலைப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்கொட்டில்கள் பயணிகள் தங்குவதற்கும், இராணுவத்தினரது சோதனை நடவடிக்கைகளுக்கும் ஒத்த வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன. (வ)

# சிறுவர் சீரழிவைத் தடுக்க 782 இலட்சம் உதவி

(கொழும்பு)

சிறுவர்களை பல்வேறு சீரழிவுகளிலிருந்தும் பாதுகாக்கும் சர்வதேச சிறுவர் நிதியத்தின் திட்டங்களுக்கு சுவீடன் சர்வதேச அபிவிருத்தி கூட்டுறவு முகவர் நிலையம் 782இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

சிறுவர்கள் இறப்பு வீதத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்ற போதிலும்,

பாலியல் துஷ்பிரயோகம், வர்த்தக ரீதியில்வெளி நாட்டவர்களுடன் பாலியல் உறவுகளை ஏற்படுத்துவதற்கு சிறுவர்களை பயன்படுத்துதல் போன்றன அதிகரித்து வருவதாக யுனிசெவ் நிறுவனம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் ஒரு லட்சம் முதல் ஒரு லட்சத்து 50ஆயிரம் சிறுவர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய செயற்பாடுகளிலிருந்து சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவே இந் நிதி பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ.8)

# புத்தரின் போதனைகளுக்கமைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்

## பிரதமரின் அண்மைய யோசனை இது

(கொழும்பு)

எம் மத்தியில் இருக்கும் பிரச்சினைகளுக்கு புத்த பெருமானின் போதனைகளுக்கு அமைய தீர்வுகளைக் காண முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று மஹியங்கனை ராஜமகா விகாரையில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது;

வெவ்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும், வெவ்வேறு அரசியல் கருத்தைக் கொண்டிருந்தாலும் எம் மத்தியில் இருக்கும் பிரச்சினைகளுக்கு புத்தபெருமான் காட்டிய வழி நடப்பது நல்ல தீர்வாய் அமையும் என்றார். (உ)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்க.திருநாவுக்கரசு, உபதலைவர் ஐ சந்திரராசா செயலாளர் இ. வேல்குமார், உபசெயலாளர் ந.பார்த்தீபன், பொருளாளர் வை. விஜயராசா இவர்களுடன் 4 பேர்கொண்ட நிர்வாக்சபை உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பட்டார்கள். (வ)

## நெஞ்சை நெகிழ வைத்தாய்

எத்தனை துயர் எம்மை வாட்டிய
போதிலு முன்னை நம்பிநாம்
நித்திய நைமித்தியபூசைகள்
நிறைவுற இங்கு செய்கிறோம்
அத்தனே எங்கள் அழுனகையை மாற்றி
அமைதியைத் தந்தி டென்று நாம்
நித்தமும் ஓல மிடுவ துந்தனின்
நீள் செவிக் கெட்ட வில்லையோ

புத்தர் யேசு அல்லாஹ் சிவன் சொன்ன
அன்பு இங்கே அழிந்ததால்
இத்தனை துயர் வந்ததை இந்த
ஈனர் உணர்ந் திடவைத்திடு
சித்தாமிர் தபுட் கரணியில் நீயும்
தீர்த்த மாடிடும் வேளையில்
எதரின் இதயத்தை ஈரத்தால்
நெகிழ வைத்தமைதி தந்திடு

-கவிமணி அன்னை தாஸன்

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 05

## பகுதி II

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

**பின்வரும் பாடலை வாசித்து 01~07 வரையான வினாக்கஞ்க்கு விடைதருக**

அழகு தமிழை அள்ளித் தந்து
கடுமையான பாடம் தன்னை
இலகு வாக்கி மனதில் ஊட்டி
இனிக்க இனிக்க பேசி எம்மை
மகிழ்ந்து கற்று மகிழச் செய்து
ஏணியாக்கி உயர்த்தி எம்மை
எளியனாக நின்று பார்த்து
மனதில் இன்பம் கொள்ளும் ஆசான்

**பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. அள்ளிக்கொடுப்பது என்பது
   1) கொடுப்பது 2) கற்பிப்பது 3) அதிகமாகக் கொடுப்பது
2. மனதில் பதியவைத்தல் என்பது
   1) கற்பித்தல் 2) மனதைக் கவர்தல் 3) விளங்கக் கற்பித்தல்
3. எளியனாக என்பதன் பொருள்
   1) பெருமை இல்லாதவனாக 2) வறியவனாக 3) அடக்கமுள்ளவனாக
4. ஆசான் என்பதன் ஒத்த சொல் ..........................................
5. இனிக்க இனிக்க என்பதன் எதிர்ச் சொல் ....................................
6. மனதிலூட்டி என்பதைப் பிரித்தெழுதுக ....................................
7. இப் பாடலில் கவிஞர் யாரைப் பற்றிக் கூறுகிறார் ....................................

**08~12 வரையான வினாக்களில் குறிப்பிடப்பட்ட சேவைகளைப் பெறுவதற்கு நாட வேண்டிய இடத்தை இணைக்குக.**

| சேவை | நாடவேண்டிய இடம் |
|---|---|
| 8. நகை அடகு வைத்தல் | A தபாற் கந்தோர் |
| 9. வாகன வரி செலுத்துதல் | B மாவட்டச் செயலகம் |
| 10. மரணச் சான்றிதழ் பெறல் | C தேசிய சேமிப்பு வங்கி |
| 11. வானொலி, தொலைக்காட்சி அனுமதிப்பத்திரம் பெறல் | D பிரதேச செயலகம் |
| 12. ஸ்த்திரி கணக்கை ஆரம்பித்தல் | E மக்கள் வங்கி |

**ஒரு விற்பனை நிலையத்திலுள்ள சில பொருட்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது 13~30 வரையான வினாக்களுக்கு விடை தருக**


| பொருள் | உற்பத் திக்காலம் | காலாவ தித்திகதி | தொகை | மொத்த.வி | சில்லறை.வி |
|---|---|---|---|---|---|
| மலிபன் பிஸ்கட் | 20.02.2000 | 19.02.2002 | 125 | 22.00 | 24.00 |
| நுளம்புத்திரி | 15.07.2001 | 20.07.2003 | 175 | 46.00 | 47.50 |
| பனடோல் | 18.04.2001 | 14.04.2003 | 100 | 15.00 | 18.00 |
| லக்ஸ்பிறே | 17.12.2000 | 08.12.2002 | 200 | 89.00 | 92.00 |
| அங்கர் | 12.03.2002 | 08.02.2002 | 150 | 96.00 | 97.50 |

**பொருட்களின் உற்பத்தித் திகதியை ஏறுவரிசையிலும் காலாவதியாகும் திகதியை இறங்குவரிசையிலும் எழுதுக.**

| ஏறுவரிசை | இறங்குவரிசை |
|---|---|
| 13. | 18. |
| 14. | 19. |
| 15 | 20 |
| 16. | 21. |
| 17. | 22 |


23. நுளம்புத்திரி முழுவதையும் விற்பதன் மூலம் வியாபாரி அடையும் இலாபம் என்ன? ..........................................
24. ஒரு பனடோல் காட்டில் 12 குளிசைகள் உள்ளன ஆயின் ஒன்றின் சில்லறை விலை? ..........................................
25. 25லக்ஸ்பிறே பைக்கட்டுக்களை வாங்கும் ஒரு மொத்த வியாபாரி கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு? ..........................................
26. மலிபன் பிஸ்கட் பெட்டியை எத்தனை வருடம் விற்பனை செய்யலாம்? ..........................................

**சலாகை வரைபில் காட்டப்பட்ட தொகைக்குக் கீழ் அதன் பெயரை எழுதுக**




26. .................... 27. .................... 28. ....................
29. .................... 30. ....................

**31~33 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட வரைபை அவதானித்து விடை தருக**



பதுளை, பரகும்பா வீதியின் 2.2.2002 அன்று சென்ற வாகனங்களின் தொகை மேலேயுள்ள வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது. மொத்தமாகச் சென்ற வாகனங்களில் எண்ணிக்கை 360 ஆகும். அதன் விபரம்.

பஸ் 80 , கார் முழுவதின் 1/9 பங்கு லொறி முழுவதின் 4/9 பங்கு சைக்கிள்கள் 40 மிகுதி மோட்டார் சைக்கிள்கள்

31. பஸ் முழுவதில் என்ன பங்கு
32. அவ்வீதியால் சென்ற லொறிகள் எத்தனை?
33. வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள்கள் எத்தனை?

நாவலர் மகாவித்தியாலயத்தின் தடகளப்போட்டி 22.03.2002 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு.திருமதி. திருக்குமரன் கலந்து சிறப்பித்தனர். அங்கு உயரம் பாய்தல், நீளம் பாய்தல், 100M, 200M ஓட்டம், தாரா நடை, தவளைப்பாய்ச்சல், அஞ்சலோட்டம், பலூன் உடைத்தல், வினோத உடைப்போட்டி, கயிறிழுவை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இடைவேளையின் போது உடற் பயிற்சி கண்காட்சி நடைபெற்றது. போட்டிகளின் ஆரம்பிப்பாளராக லயன் எஸ்.முத்துக்குமாரசாமி கடமையாற்றினார்.

| சுவட்டு நிகழ்ச்சி | மைதான நிகழ்ச்சி | அலங்கார நிகழ்ச்சி |
|---|---|---|
| 34. .................... | 36.................... | 38.................... |
| 35. .................... | 37.................... | 39.................... |

**சரியான விடையின் கீழ்க் கீறிடுக**

40. ஆரம்பிப்பாளர் என்பவர்
   1) மத்தியஸ்தர் 2) தொடக்குநர் 3) போட்டியாளர்
41. பிரதமவிருந்தினர் என்பவர்
   1) விழாவில் கௌரவிக்கப்படுபவர்
   2) விழாவில் கலந்து கொள்பவர்
   3) விழாவைக் கண்காணிப்பவர்

**42~46 வரையான படங்களைப் பார்த்து செயல்களை ஆங்கிலத்தில் எழுதுக**

42.  ....................................
43.  ....................................
44.  ....................................
45.  ....................................
46.  ....................................

47. ஒரு வியாபாரி தன்னிடமிருந்த 5Kg 250g தேயிலையை 150g சரைகளாகக் கட்டினான். அவன் கட்டிய சரைகள் எத்தனை? ....................
48. 1Kg தேயிலையின் விலை 80.00 ஆயின் ஒரு சரையின் விலை என்ன?....................
49. ஒரு மருந்துப் போத்தலில் 90Ml மருந்து அடைக்கப்பட்டது. 29 போத்தலில் எத்தனை Ml மருந்து அடைக்கலாம்? ....................

**பின்வரும் பாடலில் விடப்பட்ட பகுதியை நிரப்புக.**

50. ஒரு தாய் மக்கள் ...............
51. ஒன்றே நாம் வாழ ....................
52. நன்றே .................... ஓடும்
53. ஒன்றே நம் .................... நிறம்
54. யாவரும் .................... கருணையுடன்
.................... சிறக்க வாழ்ந்திடுவோம்
56. இப்பாடலை இயற்றியவர்
   1) பாரதியார் 2) ஆனந்த சமரக்கோன் 3) குமாரசாமிப் புலவர்
(சரியான விடையின் கீழ்க் கோடிடுக)

பின்வரும் இணைச் சொற்களின் இலக்கங்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக
1. கல கல வென 2. சல சல வென 3. பளிச் பளிச் சென 4. கட கட வென 5. பட பட வென

57. அருவி ...... சலசலத்து ஓடியது.
58. சிவானந்தன் கொழுத்திய பட்டாசு ..... வெடித்தது
59. மின்னல் ..... மின்னிக் கண்ணையும் பறித்தது

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வெளியீடொன்று இப்படிக் கூறுகிறது

பிறருக்கு உதவவும், கருணை கொள்ளவும், முயறசி செய். உன்னால் ஒருவருக்குத் தீங்கு ஏற்படுமானால் மன்னிப்புக் கேள். ஓய்வு நேரத்தில் விளையாடு. இல்லையேல் அந்த நேரத்தில் உனக்குப் பிடித்த பொழுது போக்கைச் செய்.

60. பொழுது போக்கு ஒன்று எழுதுக. ....................
61. அடுத்தவரின் மனம் நொந்தால் என்ன செய்ய வேண்டும் ....................
62. மாலை முழுதும் விளையாட்டு என்று கூறிய கவிஞர் யார்? ....................
63. முயற்சியுடையார் ....................
64. இவ் விவரணத்தைக் கூறியது யார்? ....................


வெசாக் கூடு ஒன்றும் உருளும் வண்டி ஒன்றும் செய்வதற்காக முகமட் சேகரித்த பொருட்கள் இவை. நூல், தடி, ஆணி, ஈர்க்கில், வர்ணக் கடதாசிகள், பசை

இவற்றைக் செய்வதற்கு இன்னும் சில பொருட்கள் தேவைப்படுகின்றன அவற்றுள் மூன்றைத் தருக
65. .................... 66. .................... 67. ....................

**சரியான விடையின் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுத்தில் எழுதுக**

68. வெட்டுத் துண்டுத்தையலைப் பயன்படுத்தி அலங்கரிக்கப்படுவது
   1) தலையணை உறை 2) சேலை 3) சட்டை ..............
69. வெட்டுத் துண்டுத்தையல் என்பது
   1) துணிவாங்கித் தைத்தல்
   2) வெட்டுக் கழிவு துண்டுகளில் தைத்தல்
   3) பழகும் போது தைத்தல் ....................
70. அஜநதா குகை ஓவியம் உள்ள இடம்
   1) அனுராதபுரம்
   2) சிகிரியா
   3) இந்தியா ....................

மூன்று ஒரே அளவான புனல்கள் எடுக்கப்பட்டு முதலாவதில் மணல் மண்ணும் இரண்டாவதில் தோட்ட மண்ணும் மூன்றாவதில் களி மண்ணும் இடப்பட்டன. மூன்றிலும் ஒரே நேரத்தில் ஒரேயளவு நீர் ஊற்றப்பட்டது.




இப் பரிசோதனையின் நோக்கம்
1) மண்ணிலுள்ள நுண்ணங்கிகளை அறிதல்
2) நீரை அதிகமாக வைத்திருக்கும் மண்ணை அறிதல்
3) நீரின் தூய்மையைப் பரிசோதித்தல்

## இன்று ஒரு தகவல்

# இதோ சங்கிலித் திருட்டு

அன்று ஞாயிற்றுக்கிழமை மணி 10 இருக்கும். சந்தையில் எள்விழ இடமில்லாத கூட்டம். கடைக்காரர்களின் சத்தமும், வாடிக்கையாளர்களின் சத்தமும் காதைத் துளைத்தன. ஒரு வழியாக இராமு அம்மா சொன்ன சாமான்களை வாங்கிக் கொண்டு சந்தையை விட்டு நகர்ந்தான். அச்சமயத்தில் ஒரு பெண்மணி 'ஐயோ! திருட்டு! திருட்டு! என்குழந்தையின் சங்கிலி! தங்கச் சங்கிலி! என்று அலறினாள். உடனே அவளைச் சுற்றிக் கூட்டம் மொய்க்க ஆரம்பித்தது. அப்பொழுது ஒருவன் இராமுவை இடித்துக்கொண்டு கூட்டத்தில் விரைந்து சென்றான். 'இராமுவுக்கோ எரிச்சல் தாங்க முடியவில்லை. அந்த ஆளைப் பார்த்து மெதுவாகத் திட்டியவாறே முறைத்தான்.

என்னுடைய குழந்தையை இங்கு விட்டுவிட்டு நான் கடையில் காய்கறி வாங்கினேன். வந்து பார்த்தால் சங்கிலியைக் காணவில்லை. அதோ ஓடுகிறானே, அவனைப் பார்த்தால் எனக்கு சந்தேகமாக இருக்கிறது? என்று இராமுவை இடித்து விட்டு ஓடியவனைச் சுட்டிக் காட்டி கூறினாள் அந்தப் பெண்மணி. உடனே சிலர் ஓடிச்சென்று அவனைப் பிடித்துச் சோதனை செய்தபோது ஒன்றும் அவனிடம் அகப்படவில்லை. அவனை விட்டுவிட்டனர்.

இதைக் கவனித்த இராமுவுக்கு மேலும் அங்கு நின்றுகொண்டிருக்கப்பிடிக்கவில்லை. ஏற்கனவே தாமதமாகிவிட்டது. அம்மா திட்டினாலும் திட்டுவாள். எனவே, வீட்டைநோக்கி விரைந்து சென்றான். அவனுடைய வீடு அப்படியொன்றும் தொலைவில் இல்லை. சந்தைக்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு தெருவில் தான் இருந்தது. இராமு தற்செயலாகத் திரும்பிப் பார்த்த பொழுது, அவனை இடித்துச் சென்ற தடியன், சிறிது தூரத்தில் தன் பின்னாலேயே வந்துகொண்டிருந்ததைக் கண்டான். இராமு அப்பொழுது தன்னுடைய வீடு இருந்த தெருவின் அருகே வந்து விட்டான். தெரு வளைவில், எதிரில் இருந்த சுவர் ஒன்றில் 'பளிச்' என்று ஒளி அடிப்பதைப் பார்த்தான். ஒளி தன்னுடைய கூடையிலிருந்து வருவதாக அறிந்தான். உடனேயே கூடையைப் பார்த்தான். உள்ளே தங்கச்சங்கிலி பளபளத்தது. நிலைமையை உணர்ந்த அவனுடைய மூளையில் 'பளிச்' என ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது.

தெருவின் வளைவில் திரும்பினான். தன்னுடைய நடையின் வேகத்தை அதிகரித்தான். தடியனும் வேகமாக அவனை நோக்கிவந்துகொண்டிருந்தான். இராமு வீட்டிற்குள் வேகமாக நுழைந்தான். வீட்டில் சமைத்துக்கொண்டிருந்த அவனுடைய அம்மாவை நோக்கி, 'அம்மா! யாரோ ஒரு தடியன் நம் வீட்டுக்கு வந்துகொண்டிருக்கிறான். சற்று நேரம் அவனுடன் பேசிகொண்டிருங்கள். அதற்குள் நான் வந்து விடுகின்றேன் என்று அவசரமாகக் கூறிவிட்டு, காய்கறிக் கூடையை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு தன்னுடைய வீட்டின் கொல்லைப்புற வழியாகச் சிட்டாகப் பறந்தான்.

அவன் சென்ற சற்றுநேரத்திற்கெல்லாம் அந்தத் தடியன் இராமுவின் வீட்டினுள் நுழைந்தான். வாசலில் நின்ற இராமுவின் தாயாரை நோக்கி, 'என்னுடைய சங்கிலியை திருடிவந்த அந்தப் பையன் எங்கே?' என அதட்டுவது போல் அவன் கேட்டான். 'என்ன! எங்கள் இராமு திருடினானா? அவன் அதுபோல் எல்லாம் செய்யமாட்டானே' என்றாள் அவள். 'எங்கே அவன்? எங்கே அவன் காய்கறிவாங்கி வந்த கூடை? அதைக் காண்பியுங்கள் அதற்குள் ஒருவேளை வைத்திருப்பான்' என்றான் அவசரமாக. இதோ பார்க்கிறேன் என்று கூறியவாறே வீட்டினுள் நுழைந்தாள் இராமுவின் அம்மா. வீட்டினுள் சென்று கூடையைத் தேடிக்கொண்டிருந்தபோது இராமு வீட்டினுள் நுழைந்தான்.

'டேய் என்னுடைய சங்கிலியை எங்கே வைத்தாய்?' என்று அவசரமாகக் கேட்டான் அந்தத் தடியன். அப்பொழுது 'இதோ சங்கிலி' என்று ஒரு குரல் கேட்டது. 'ஆனால் இது தங்கச் சங்கிலி அல்ல. இதோ இரும்புச் சங்கிலி என்றவாறே நுழைந்தார் இன்ஸ்பெக்டர் கோபாலகிருஷ்ணன். மறுநிமிஷம் அந்தத் தடியன் கையில் விலங்கை மாட்டினார்.

இராமுவின் அம்மாவோ ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள். அப்பொழுது இன்ஸ்பெக்டர் 'அம்மா! உங்களுடைய மகன் மிகவும் புத்திசாலி, அதனால்தான் இவ்வளவு காலமாகப் பொலிஸுக்கு டிமிக்கி கொடுத்து வந்த இந்தப் பிக்பக்கெட் திருடனைப் பிடிக்க முடிந்தது' என்று கூறியவாறே திருடனைக் கைதுசெய்தார்.

'ஏன் அந்த ஆளைக் கைது செய்கிறீர்கள்? இராமு திருடியதாகத் தானே அவன் என்னிடம் சொன்னான். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே' என்றாள் இராமுவின் அன்னை. 'அது பொய், சந்தையில் தனியாக நின்றுகொண்டிருந்த ஒரு குழந்தையிடமிருந்து ஒரு தங்கச் சங்கிலியைத் திருடினான் இந்தத் தடியன். அந்தக்குழந்தையின் தாய் இவன் மீது சந்தேகப்பட்டதையடுத்து, சங்கிலியைக் கூட்டத்தில் இடிப்பது போலப் பாவனை செய்து இராமுவின் கூடையில் போட்டுவிட்டான். பின்பு இராமுவிடமிருந்து மிரட்டி வாங்கிவிடலாம் என்ற எண்ணம் இவனுக்கு.

இராமு நினைத்திருந்தால், தடியனைப் பார்த்துப் பயந்து அவனிடம் சங்கிலியைக் கொடுத்திருக்கலாம். ஆனால் சமயோசித புத்தியினால் அவனை வீடுவரை வர அழைத்து பிடித்துக்கொடுத்துவிட்டான். சபாஷ் இராமு என்று சொல்லி இராமுவைத் தட்டிக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர். இராமுவின் அன்னை தன்னுடைய மகனின் மதிநுட்பத்தை எண்ணி மகிழ்ந்தாள். ●

நா. முருகேசன்

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையும், யாழ். மருத்துவபீடமும் இணைந்து உணவு பரிமாறும் நிலையங்களில் பணிபுரிவோருக்கான சுகாதாரக் கருத்தரங்கொன்றை எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தவுள்ளன. (உ)

### புதிய அதிபர்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் சோ. விஸ்வலிங்கம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அப்பதவிக்கு அச்செழு சைவப்பிரகாசவித்தியாலய அதிபர் இ. குணநாதன் யாழ். வலயக் கல்வித்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-79)

## ஒருநாடு என்ற கொள்கை வழுவாதவிடத்து
# இந்நாள் பிரதமரின் முயற்சிகளுக்கு
# முன்னாள் பிரதமர் முழு ஆதரவு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச்செல்லப்படும் சமாதான முயற்சிகள் யாவும் நாடு பிளவுபடாத வகையில் ஒரு நாடு என்ற கோட்பாட்டின் கீழ் அமையுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்போவதாக முன்னாள் பிரதமரும்பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகள் மீதான இரண்டாவது வாசிப்பு நேற்று முன்தினம் மூன்றாவது நாளாக நடைபெற்றபோது அதில்கலந்துகொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கை விட்டு தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் அத்துடன் நாடு பொருளாதாரம், கல்வி, கலாசாரங்களில் வளர்ச்சியடைய வேண்டுமானால், சமாதானம் ஏற்படவேண்டும் எனவும்தெரிவித்துள்ளார்.

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து செயற்படவேண்டிய காலகட்டம் இப்போது உருவாகியுள்ளது எனவும் சுட்டிக்காட்டிப் பேசினார் (உ-8)

### பங்குனி உத்தர விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் பலாலி ஆசிரியர் கலாசாலை சைவ மாணவர் மன்றம் நடத்தும் பங்குனி உத்தர விழா இன்று வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் க. சிவபாதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அதிபர் கு. சதாசிவமூர்த்தியின் வாழ்த்துரையைத்தொடர்ந்து பண்டிதர் க. முத்துவேலு, வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் ஆகியோரின் சிறப்புரைகள், கலாசாலை மாணவிகளின் பண்ணிசை, வர்த்தக நெறி முதலாம் வருட மாணவர்களின் கவியரங்கு, கலாசாலை மாணவர்களின் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளன. (செ)

●

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்ததனைத் தொடர்ந்து மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன், வரணிசுட்டி புரம் அம்மன், கச்சாய் கண்ணகை அம்மன், மீசாலை சோலை அம்மன் ஆகிய கோவில்களில் பங்குனித் திங்கள் உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (செ-124)

### வரதருக்கு பவளவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் மூதறிஞர் தி. ச. வரதராசனின்(வரதர்) பவளவிழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இலக்கிய வட்டத்தலைவர் கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் குரு சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பராமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், மஹாராஜஸ்ரீ எஸ். ரி. சண்முகநாதக் குருக்கள், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரையை வழங்கவுள்ளனர்.

இலக்கிய கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) கௌரவிப்புரையையும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பொன்னாடை போர்த்தி வாழ்த்துரையையும் வழங்கவுள்ளனர்.

இயற்றமிழ் வாழ்த்துக்கள், இசைத்தமிழ் வாழ்த்துக்கள்' நட்புரை வாழ்த்துக்கள் ஆகியவற்றை அறிஞர்களும், கவிஞர்களும், நண்பர்களும் வழங்கவுள்ளனர்.

### சித்திர ஆக்கப்பணி கருத்தரங்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சித்திர ஆக்கப்பணிக் கருத்தரங்குகள் திட்டமிட்டபடி ஏப்ரல் மாதம் இடம் பெறாது எனத் தெரிய வருகிறது.

கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மத்திய கல்வி அமைச்சில் உள்ள சித்திரக் கல்விப் பணிப்பாளர் துசாரா குணவர்த்தன தலைமையிலான 15 பேர் கொண்டகுழு, ஏப்ரல் மாதம் யாழ். குடாநாட்டிலுள்ள 5 வலயங்களைச் சேர்ந்த சித்திர பாட ஆசிரியர்களுக்கு ஆக்கப் பணிக் கருத்தரங்கு நடத்துவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும், இவர்கள் யாழ்ப்பாணம் வருவதுதாமதமாகும் என்பதால் மே மாதத்திற்கு இக் கருத்தரங்கு பிறிபோடப்பட்டுள்ளது. (உ)

### கோப்பாய் கோமகன் வாழ்ந்த மண்ணில் சர்வமத சமாதானப் பிரார்த்தனை!

(கோப்பாய்)

சொல்ல முடியாத துன்பங்களைப் போரினால் அனுபவித்த நாம், இந்த நாட்டில் இரு இனங்களும் சமாதானமாக தத்தமது உரிமையுடன் வாழவேண்டும் என்று சிந்தனைத் தெளிவுடன் வாழ்ந்த கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம்வாழ்ந்த மண்ணில் சமாதானம் வேண்டி சர்வமத பிரார்த்தனையில் ஈடுபடுவது மிகவும் பொருத்தமானதும் வரவேற்கத்தக்கதுமாகும் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சிவத்திரு ச. தானேஸ்வரக் குருக்களின் 20 ஆம் ஆண்டு திருமண நிறைவையொட்டி அண்மையில் கோப்பாயில் இடம்பெற்றசர்வமத பிரார்த்தனை வைபவத்தில் கலந்துகொண்டு பேசியஅவர்மேலும் பேசுகையில்ஒருவரின்திருமண நிறைவு விழாவில் நாட்டிலே சமாதானம்நிலவுவதற்கு சர்வமதவழிபாடுஇடம்பெறுவது எல்லோர்க்கும் முன்மாதிரியானஒரு செயல்என்றுகுறிப்பிட்டார்.

யாழ். நாகவிகாரர பிரதம குரு ஒவிட்டிகமுவே போதிரத்னஹாமி தேரர்உரையாற்றும்போது, நீண்டகால வெடிச்சத்தங்களின்பின் இன்று நாம் அச்சமற்ற நிம்மதிப்பெருமூச்சுவிடுகின்றோம். இந்த நிம்மதி நிரந்தரமானதாக இருக்க வேண்டும். நாம் இந்த அமைதியைப் பயன்படுத்தி இன, மதவேறுபாடின்றி சுதந்திரமாகவும்சமாதானமாகவும் வாழ ஆண்டவனை பிரார்த்திப் போம் என்றார்,

யாழ். பள்ளிவாசல் மௌலவி எவ். எம். முகைதீன் ஜோர்ஜ் அடிகள்உட்படபலர் உரையாற்றினர். (எ-79)

### பூப்பந்து சம்மேளன நிர்வாகிகள்

(சுண்டுக்குளி)

பூப்பந்து சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் அதன் தலைவர் சன். தயாளன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இடம்பெற்ற ஆட்சிக்குழு தெரிவின்போது கீழ் காண்பவர்கள் போட்டி ஏதுமின்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- சன். தயாளன், செயலாளர்:- எஸ். மோகன், பொருளாளர்:- ஜி. டானியல் மதியழகன், உபதலைவர்:- திருமதி ரூபி இராஜரட்ணம், உபசெயலாளர்:- எஸ். காண்டீபன், நிர்வாக சபை உறுப்பினர்கள்:- யு. சுரேஸ்காந்தன், ஸ்ரீமைதிலி சின்னப்பு, ரி. கோகுலதாஸ், கணக்காய்வாளர்:- கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம். (உ-110)

### சிந்தனைக்கு விருந்து

## செத்தனரா? பிழைத்தனரா?

போர்க்காலச் சூழலிலே தொலைந்து போன
புதல்வர்களைக் கணவரினை உடன் பிறந்த
பேர்களினைக் காணாதே பேதலித்துப்
பெருந்துயரக் கடலினிலே வீழ்ந்தோர் தங்கள்
பேரிழப்பை மதிக்காதே தொடர்ந்து பன்னாள்
பெரியவிசாரணையென்று நாட்கடத்தும்
சீரில்லாச் செயலுக்கு முடிவு வேண்டும்
செத்தனரோ? பிழைத்தனரோ? தெரிதல்
-வேண்டும்

'பழையவன்'

# தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியில் வரதர் பணி

## மறக்க முடியாத ஒன்றாக விளங்கி 'நிற்கின்றது

புதிய தலைமுறை எழுத்தாளர்களில் அநேகமானவர்கள் மூத்த எழுத்தாளர் வரதரைப் பற்றிஎதுவுமே தெரிந்திருக்க மாட்டார்கள். அது அவர்களின்குற்றமல்ல. அண்மைக் காலத்தில்எமது தேசியப் பத்திரிகைகளில் அவரின் எழுத்துக்கள் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. கைலாசபதிதினகரனில் ஆசிரியராக இருந்தபோது வரதரை வலிந்துஎழுதவைத் துப் பிரசுரித்தார்.' வண்ணமலர்' என்றபுதுமையான தொடர்கதை 1960 இல் தினகரனில் வெளிவந்தது. அதன் முதல் அத்தியாயத்தை மூத்த எழுத்தாளர் வரதர் தொடக்கி

## இன்று வரதரின் பவளவிழா

வைக்க: அடுத்த அத்தியாயங்களை அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த கே.டானியல் ப மா சோமகாந்தன், காவலூர் ராசதுரை, உதயணன், ஈழத்துச்சோமு. என்.கே ரகுநாதன் ஆகியோர்எழுதியதாக ஞாபகம்.

### பள்ளிப்பருவத்தில் எழுதியவர்

தேசியப் பத்திரிகைகளில் எழுதாததால் வரதர் எழுதாமல் ஓய்ந்து இருந்து விட்டார் என்று அர்த்தமல்ல 30 களின் பிற்பகுதியில் 'ஈழகேசரி' வெளியிட்டுக் கொண்டிருந்த'கல்வி அனுபந்த மலர்' வெளியீட்டில் தனது பள்ளிப் பருவத்தில் 14 வது வயதில் எழுதத் தொடங்கிய வரதர். சென்ற ஆண்டிறுதிவரை வெளிவந்த 'அறிவுக் களஞ்சியம். மாணவர் மாத இதழின் ஆசிரியத் தலையங்கம் வரை பலவகையான ஆக்கங்களை அவ்வப்போது எழுதிக் கொண்டு வந்திருக்கிறார். எழுத்துலகில் முத்திரை பதித்த எழுத்தாளர் வரதரின் எழுத்துப் பணி நன்றியோடும் மகிழ்வோடும், பெருமையோடும் கொண்டாடப்பட வேண்டியது.

### மறுமலர்ச்சி

ஈழ கேசரி மாணவர் மலரில் அக்காலத்தில் எழுதிக்கொண்டிருந்த வரதர், அ.செ. முருகாந்தன், அ.ந கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன்' மஹாகவி என்ற ருத்திர மூர்த்தி பஞ்சாட்சரசர்மா கனக செந்தில் நாதன் முதலியோர் மறுமலர்ச்சி இலக்கியச்சங்கத்தை அமைத்துமறுமலர்ச்சி என்றமுதலாவது இலக்கியச் சஞ்சிகையையும்வெளியிட அச்சாணியாகவிளங்கியவர் வரதர் புதுமை இலக்கிய வேட்கையும், இளம் வயசில் பெற்ற அச்சுக்கலை அனுபவமும் அவருக்கு தூண்டுகோலாயமைந்தன.

சுமார் மூன்று ஆண்டுகள் மட்டுமே வெளிவந்த மறுமலர்ச்சி இலக்கியமாசிகை' ஈழத்து புதிய சிறுகதை இலக்கிய முயற்சிகளுக்கு களமாக விளங்கியது. அதன் கருத்துக் களத்தில் புதுமையும் பழமையும்முட்டிமோதின. இலக்கியமும் கலையும் வெறும்சுவைப் பண்டங்கள் அல்ல. சமூகப் பயன்பாடுடையவையாகவும் அமைய வேண்டும் என்ற நோக்கம் மறுமலர்ச்சியில் தான் கருக்கட்டியது. தினகரனில் 'சொக்கன்' எழுதிய சில கட்டுரைகளையும், மல்லிகை வெள்ளிவிழா மலரில் வரதர் எழுதிய ஒரு கட்டுரையையும் தவிர, மறுமலர்ச்சி பற்றிய கட்டுரைகளைக் காணோம். மறுமலர்ச்சி கால கட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி முழுமையான தொரு ஆய்வை பல்கலைக் கழக மட்டத்தில் மேற்கொண்டால் அது விரிவான ஈழத்து இலக்கிய வரலாற்றை எதிர்காலத் தலைமுறை அறிந்து கொள்ளத் துணையாக அமையும்.

### வரதர் வெளியீடுகள்

புதுக்கவிதை என்று பேசப்படுவதற்கு பல காலத்துக்கு முன்னரேவரதர் இவ்வாறான சில கவிதைப் பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததை எத்தனை இலக்கிய வாதிகள் அறிவர்? வரதருக்கு சும்மா இருக்க முடியாது. புதிது புதிதாக எதைப் பற்றியாவது சிந்தித்தபடியே இருப்பார். சொல்லாமல் கொள்ளாமல் திடீரென அவற்றுக்குச் செயலுருவமும் கொடுத்து விடுவார்.

உண்மையான கலைஞனின் சுபாவமே அதுதான்! ''வரதர் வெளியீடு'' நிறுவனத்தை நிறுவி, அதனூடாக இலக்கியத்துக்கென புதிதாக ஒரு சஞ்சிகை. பெயர் ''ஆனந்தன்'' ஆசிரியர், வரதர், கவிதைக்கென இன்னொரு சஞ்சிகை ''தேன்மொழி'' ஆசிரியர் மகாகவி. (இலங்கையில் கவிதைக்கென வெளிவந்த முதலாவது சஞ்சிகை தேன்மொழி) ஆகியவற்றை வெளியிட்டார்.

ஒருவருக்குத் தேவையான சகல தகவல்களையும் கொண்டதாக லேக்ஹவுஸ் நிறுவனம்'' பெர்குசன்டிறெக்டரி'' என்ற பெரிய நூலை ஆண்டு தோறும் வெளியிட்டு வருகிறது. எல்லோருக்கும் பயன்படக் கூடிய சிறந்த உசாத்துணை நூல். பாடசாலைகள், வர்த்தக நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்களில் அந்நூல் சிவத்த அட்டைபோடு தவறாமல் இருக்கும். 800 பக்கங்களில் வெளி வந்த வரதரின் பலகுறிப்பு தமிழிலும் அப்படிச் செய்ய முடியும் என்பதை நிரூபித்தது. அதன் நிர்வாக ஆசிரியர்; வரதர், தொகுப்பாசிரியர்: சோமகாந்தன், மூன்று ஆண்டுகள் அடுத்தடுத்து இப்பெரிய நூலின் புதிய பதிப்புகளை 70 களில் வெளியிட்டார்.

### புதினம்

ஈழகேசரிக்குப்பிறகு, வாரப் பத்திரிகையொன்றை யாழ்ப்பாணத்திலிருந்து வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதற்குவழிகாட்டியவர்வரதர் 60களின் தொடக்கத்தில் ஆரம்பித்து, இரண்டு ஆண்டுகள் வாராவாரம் சூடான அரசியல் செய்திகள 'சிரித்திரன்'சிவாஜியின் கார்டூன், சுவையான இலக்கிய அம்சங்களோடு வெளிவந்த பத்திரிகை 'புதினம்' இத்தால் சகலரும் அறிவது, என வாராவாரம் வரதர் எழுதிய தலையங்கம் சமூகச் சீர்கேடுகளுக்குச் சவுக்கடி கொடுத்தது. சிறுகதைத் துறையோடு இருந்த சோமகாந்தனை புதினத்தில். களனிநதி தீரத்திலே என்ற புனை கதையை 16 வாரங்கள் தொடர்ந்து எழுத வைத்து, பின்னாளில் அவரை நாவல்துறைக்கும் இழுத்து விட்டவர் வரதர்தான்.

### வெள்ளி

வரதரின் மற்றொரு பத்திரிகை வெள்ளி வாரந்தோறும் 'வெள்ளி' வாசகர் கேள்விகளுக்கு வாதர் அள்ளிக் கொடுத்த பதில்களின்காரமும் சாரமும் தமிழ்வாணனுக்கு நிகரானவை. அட்டைப்படங்கள் வரைவதிலும் வல்லவர் என்பதை 'வெள்ளி' பிரகாசப் படுத்திபது. அவர் வீட்டின் கூடத்திலுள்ளமகாத்மா காந்தி, சாயி பாபா, தந்தை செல்வா, மற்றும் பாரதியார், இயற்கை காட்சிகள் எவரோ வரைந்தவையல்ல அவரே தான்!

வரதரின் 'கயமைமயக்கம்' தொகுதியிலுள்ள கதைகள் அத்தனையுமே முத்துக்கள். இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகளின் முன்வரிசைஸ்தானத்தில் இன்றும் இருப்பவை உருவத்திலும் சரி உள்ளடக்கத்திலும்சரி! பெண் நிலைவாதம் மற்றும் முற்போக்குகருத்துக்கள் கலைநயத்தோடு அவற்றில்வெகு லாவகமாக கையாளப்பட்டுள்ளன.

பன்முக இலக்கியபங்களிப்புகளை செய்த சாதனையாளரின் பவளவிழா சிறப்புற வாழ்த்துவோம். □

**நா. சோமகாந்தன்**

## இராசிபலன்

(28-3-2002)

(பங்குனி 14, வியாழன்)
பூரணை பி.இ.2. 47 வரை
உத்தரம் பி.ப.5. 52 வரை
ராகுகாலம் 1.44-3.14
நல்லநேரம் 7.44-9.14
பூரணை விரதம்
பங்குனி உத்தரம்

**மேடம்**
காரிய நன்மை, மன மகிழ்ச்சி, உடல் நலம், செய் தொழில் விருத்தி.

**இடபம்**
புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், வாக்குப் பலிதம், வியாபார நன்மை.

**மிதுனம்**
கற்பனை மிகுதி, மனக் கிலேசம், தாய்வழி உறவு, காரிய தாமதம்.

**கடகம்**
பொருள் வரவு, குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, அந்நியர் சந்திப்பு.

**சிங்கம்**
மாதர் நட்பு, செல்வாக்கு குறைவு, முயற்சி கைகூடும், தனவிரயம்.

**கன்னி**
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், அமைதியான நிலை, போசன சுகம்.

**துலாம்**
சயனசுகக்குறைவு, காரிய அலைச்சல், தொழில் கஷ்டம், சுப செலவு.

**விருச்சிகம்**
தெய்வசிந்தை, காரிய நன்மை, கெளரவம், தொழில் விருத்தி.

**தனுசு**
அதிக பிரயாசை, நல்ல சம்பவம், காரியம் நிறைவேறும், பணியாளர் உதவி.

**மகரம்**
உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம், பிரயாணம், உறவினர் சந்திப்பு.

**கும்பம்**
காரிய தாமதம், காரிய தடங்கல், மனச்சோர்வு, உறவினர் மனஸ்தாபம்.

**மீனம்**
நண்பர்கள் சந்திப்பு, கெளரவம், தனவரவு, காரிய அனுகூலம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தெல்லி. புற்றுநோய்சிகிச்சை நிலையத்துக்கு கோபல்ற் தொகுதியை அன்பளிப்பாக வழங்குமாறு ஜப்பானுக்கு பரிந்துரை

(தென்மராட்சி)

வடபிராந்தியத்தில் உள்ள புற்று நோயாளர்களின் நன்மை கருதி தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு மனிதநேய அடிப்படையில் ஒரு கோபல்ற் யந்திரத் தொகுதியை அன்பளிப்புச் செய்யும்படி சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி குழுவின் இணைச் செயலாளர்களான அருட் திரு ஜே. பீ.ஈ. செல்வராசா, எஸ். பரமநாதன் ஆகியோரால் ஜப்பானிய தூதுவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடபிராந்தியத்திலிருந்து புற்று நோய்ச் சிகிச்சைக்காக மகரஹமபுற்று நோய் வைத்தியசாலைக்குச் செல்கின்ற நோயாளர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் குறித்த சிகிச்சைக்காக அதிகளவு பணத்தையும் செலவிடவேண்டியதாகவுள்ளது.

எனவே இதனைத் தவிர்த்துக் கொள்ளவும், எமது நோயாளர்கள் இங்கே தமது சிகிச்சையைப் பெறவும் வசதியாக ஜப்பான் நாடு கோபல்ற் யந்திரத் தொகுதியை வழங்க வேண்டும்.

தெல்லிப்பளையில் அமைந்துள்ள இவ்வைத்தியசாலை தற்போது 3.6 மில்லியன் ரூபா செலவில் றான் அமைப்பினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமையையும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-77)

## ரயில்சேவை ஒருபோதும் தனியார் மயமாகாது
### போக்குவரத்து அமைச்சர்

(கொழும்பு)

ரயில்சேவை ஒருபோதும் தனியார் மயமாக்கப்படமாட்டாது என அரச போக்குவரத்து அமைச்சர் பியகம உபாலி தெரிவித்துள்ளார்.

ரயில்வேத் திணைக்களத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்து சேவையை தனியாருக்கு விற்பனை செய்யும் பொருட்டு பேச்சுக்கள் நடைபெறுவதாக வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை.

ரயில் சேவையை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாடுகளினதும் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-9)

## காங்கேசன் லங்கா சீமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் மறியல் போரில் குதிப்பு

(ஏழாலை)

காங்கேசன்துறை லங்கா சீமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் நேற்று முன்தினம் முதல்தமது இணுவிலில் உள்ள காரியாலயம் முன்பாகமறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமக்கு உதவிப்பொதுமுகாமையாளரால் அனுப்பப்பட்ட வேலைநீக்கக் கடிதத்தை ரத்துச்செய்ய வேண்டும், இவ்வருடம் ஜனவரிமாதம் முதல் வழங்கப்படாதிருக்கும் சம்பளத்தை முழுச்சம்பளமாக வழங்க வேண்டும், 1991ம் ஆண்டு ஆடிமாதம்தொடக்கம் இற்றைவரையானசம்பள நிலுவை வழங்கவேண்டும் மற்றும் தற்போதைய சாதகமான சூழ்நிலையில்தொழிற்சாலையை மீளத்திறந்து அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கவேண்டும்என்றகோரிக்கைகளை முன்வைத்தே ஊழியர்கள் மறியல்போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தமதுபோராட்டம் குறித்து கைத்தொழில் அமைச்சர் மற்றும் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென்று ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-12,129)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 8.00 மணிக்கு கலைவாணி வி.க, எதிர் இந்து வி.க,

9.00 மணிக்கு சிங்கர்'பி' வி.க.எதிர் வாகீஸ்வரி வி.க,

மு.ப. 11.00 மணிக்கு மானிப்பாய்வி.க, எதிர் ஜனசக்தி, வி.க

பி.ப 600, மணிக்கு சிகொக் வி.க எதிர் பாரதி வி.க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

72. புனல்களில் பஞ்சு வைக்கப்பட்டதன் நோக்கம்
1) நீர் வடிதலைத் தடுக்க
2) மண்ணைத் தூய்மைப் படுத்த
3) மண் பாத்திரத்தில் விழுவதை தடுக்க
73) நெற் பயிர்ச்செய்கைக்குகந்தமண்
1) A 2) A,B 3) A, B, C
74) கண்ணாடி செய்யப்பயன்படும் மண்
1) A 2) B 3) A, B
75. சட்டிபானை செய்யப் பயன்படும் மண்
1) A,B,C 2) C 3) B,C

''வைத்தியராக நோயாளியை நான் பரிசோதித்த போது'' என்னும் தலைப்பில் எழுவாய் பயனிலையுடன் கூடிய 5 வசனங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது 4 சொற்கள் இருக்க வேண்டும்.

76. ................................................
77. ................................................
78. ................................................
79. ................................................
80. ................................................

**குறிப்பு:**
**விடைகளைவேறு தாளில் எழுதி 02.04.2002 இற்கு முன் எமக்குக்கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.**

## கல்விப் பகுதி
## வினாத்தாள் 05

''வலம்புரி''
இல: 15,வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்:- ................................
சொந்த முகவரி:- ................................
கற்கும் பாடசாலை:- ................................


**இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்**


தரம் 05 புலமைப் பரிசில் முன்னோடி வினாத்தாள் 05 பகுதி I இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01. வி.தனுஷன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
02) சி.சிவப்பிரஷாந், சென்.ஜோண்பொஸ்கோ
03) இ.மேரி ஜென்சிஜா, கரம்பொன் சிறிய புஷ்பம்.ம.ம.வித்
04) ஸ்ரீ.தருசன், யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
05) யோ.திருக்கணேசன், வல்வை.அ.மி.த.க பாடசாலை
06) க.பிரயாழினி, வல்வை.விநாயகர் வித்தியாலயம்
07) இ.புவிப்பிரபா, வல்வை.விநாயகர் வித்தியாலயம்
08) தி.விமல், வல்வை.விநாயகர் வித்தியாலயம்
09) ஸ்ரீ.அகிலாண்டேஸ்வரி, கொடிகாமம் அ.த.க பாடசாலை
10) ந.கௌசிகா, தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
11) அ.ஜெறிஜோண்சன், யாழ்.மத்திய கல்லூரி
12) ச.ஸ்ரீசர்மிளா, ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
13) வ.நிரோசன், சென்ஜோன்ஸ் கல்லூரி
14) மா.வருணபாலன் ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
15) ம.சிந்துஜன், பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்
16) த.ஜனந்தனி, யாழ் இந்து ஆரம்பபாடசாலை
17) பா.பிரேமசியா, உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
18) பு.கோபிநாத், வல்வை சிவகுரு வித்தியாசாலை
19) அ.கீதன், நெல்லியடி மெ.த.க பாடசாலை
20) றோ.பிரஷாந், யாழ் மத்திய கல்லூரி.
21) வ. சர்மிளா, வல்வை விநாயகர் வித்தியாலயம்
22) செ.ஜன்ஷா, வல்வை விநாயகர் வித்தியாலயம்
23) செ.சாந்தினி, வல்வை விநாயகர் வித்தியாலயம்
24) க.விதர்ஷன், வல்வை விநாயகர் வித்தியாலயம்
25) த.தயானந்தன், வல்வை விநாயகர் வித்தியாலயம்
26) க.கௌதமன், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
27) ஜெ.சரண்ராஜ், யாழ் மத்திய கல்லூரி
28) க.திமோக், யாழ் பரியோவான் கல்லூரி
29) ப.குபேரன், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்
30) க.தாரணி, இணுவில் மத்திய கல்லூரி
31) க.லக்ஷி, சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை
32) ம.பகீரதன், திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை
33) இ.விதுஷன், யாழ் மத்திய கல்லூரி
34) உ.அமிர்தா, இணுவில் மத்திய கல்லூரி
35) சி.சரண்ஜன், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
36) கு.நிஷாகரன், காரைநகர் தியாகராசா ம.ம வித்தியாலயம்
37) சி.குகரஜீபன், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியா
38) ம.சிவதரன், கரம்பொன் சிறிய புஸ்பம் ம.ம வித்தியாலயம்
39) ஸ்ரீ.சிவாத்மீகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
40) செ.சுஜீபா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
41) க.பிரியங்கா, யாழ் இந்து ஆரம்பபாசாலை
42) பி.யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாசாலை
43) பி.பிரதீபா, வல்வை சிவகுரு வித்தியாலயம்
44) ந.நிவேதா, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாசலை
45) ப.பால்ராஜ், வல்வை விநாயகர் வித்தியாலயம்
46) கு.யனுதாஸ், யாழ் இந்து ஆரம்பபாடசாலை
47) செ.கனிஸ்டன், கோண்டாவில் கிழக்கு சி.சி.த.க பாடசாலை
48) ந.ஜெயராஜன், உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்
49) ஜெ.துவாரகன், யாழ் மத்திய கல்லூரி
50) செ.ஜெகப்பிரியா, சென்ஜோண்ஸ் பொஸ்கோ
51) சி.சகிஷ்னா, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
52) நா.தர்சிகா, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
53) எஸ்.சிவாஸ்கர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
54) க.ல்க்ஷிகா, துன்னாலை மெ.மி.த.க பாடசாலை
55) அ.கோபிநாத், கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை
56) பு.மோகன்ராம், சென்ஜோன்ஸ் கல்லூரி
57) வி.பிரியங்கா, கரவெட்டி அ.த.க பாடசாலை
58) வ.மயூரதி, இருபாலை சீ.சீ.த.க பாடசாலை
59) ம.நிகிந்தன், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி
60) ந.லக்ஸ்மன், யாழ்.மத்திய கல்லூரி
61) அ.பிரதீபகுமார், யாழ்.மத்திய கல்லூரி
62) க.உதயராஜ், யாழ்.மத்திய கல்லூரி
63) நி.பகீர்த்தன், கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை
64) வ.விகர்ணன், சென்ஜோண் பொஸ்கோ
65) த.பிரணாளன், தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை
66) ற.டிலக்ஸன், யாழ் மத்திய கல்லூரி
67) இ.துஶ ந்தி, உடுவில் மகளிர் கல்லூரி
68) ம.தர்ம்ஶா, சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலை
69) த.அகிலன், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்
70) வி.அனுசியன், யாழ் மத்திய கல்லூரி
71) உ.டுசாளினி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
72) சு.அருணியா, மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்
73) அ.வனஜா, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
74. இ.கிருஸ்ணமேனன் - வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
75. ஸ்ரீ.சஞ்ஜீவன் -கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
76. கு.யசிகரன் - கொட்டடி நமசிவாய. வித்தியாலயம்.
77. இ.குகநந்தினி - கொட்டடி நமசிவாய் வித்தியாலயம்.
78. தா.கௌதமன் - கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
79. த.சில்வியா - வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
80. செ.கௌசிகா - பளை மத்திய கல்லூரி
81. ப.பிரணவன் - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
82. அ.அனுஸ்ரிகா - உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
83. க.கஜரூபன் - ஆனைப்பந்தி மெ. மி., வித்தியாலயம்
84. இ.தர்சிகா - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
85. ஸ்ரீ.பிரவீணா - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
86. பி.கயானா - சென்.ஜோண் பொஸ்கோ
87. தா. ஜெகதாஸ் - ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியா
88. ச.திபாகர் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
89. க.சாயிராம் - உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
90. கெ.மயூன் - யாழ். மத்திய கல்லூரி
91. த.குணேஸ்வரன் - வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்
92. வி.தீபன்ராஜ் - ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலயம்
93. செ.சுஜேனி - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
94. பு.கஜலக்ஷி - யாழ்.இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
95. வி.சாரதாஜினி - கன்னியர் மடம் மகாவித்தியாலயம்
96. வ. லக்ஸ்மன் - மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
97. இ.நேசராஜ் - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
98. க.விஸ்ணுப்பிரியா - வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
99. க.சுதர்ஷன் - யாழ். மத்திய கல்லூரி
100. ச.சதீஸ்வரன், இணுவில் மத்திய கல்லூரி.
101. இ.நாதகோபன், தம்பசிட்டி த.க.பாடசாலை.
102. இ.நிரோஷன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
103. ந.நிதர்ஷனா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
104. பா.சிறீலக்சியா, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.
105. செ.ஆன்டனியா, சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை.
106. மோ.விதூஷனன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
107. ஜெ.ஜெனுஷன், இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை.
108. ச.கஜந்தன், துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை.
109. சி.தனுஷா, சென்ஜோண் பொஸ்கோ.
110. ம.சுவர்ணன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
111. ப.அம்பிகை, சென்ஜோண் பொஸ்கோ.
112. க.அபிராம், ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
113. இ.தனுசன், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்.
114. வா.நிலானி, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
115. வை.மதுவந்தி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
116. வ.சாருஜன், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்.
117. ப.தீபா, உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்.
118. சி.ஜனகன், சென் ஜோன்ஸ் கல்லூரி.
119. கே.சயந்தன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
120. ஜெ.கிறிஸ்ரிகுமார், யாழ் மத்திய கல்லூரி.
121. ச.ஜோன்சத்தியரஞ்சித், உடுவில் மகளிர் கல்லூரி.
122. அ.ரஜீவா, இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை
123. கு.கோபிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
124. ர.பிரியதர்சினி, சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்.
125. சி.ஷர்மிலா, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.
126. பா.தமிழினி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.
127. ஜெ.நரேஷ், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
128. உ.சாழினி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
129. சி.ஜங்கரன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.
130. ம.றொசான், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
131. க.கீர்த்திகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
132. யோ.அசாத், அளவெட்டி றோ.க.த.க.வித்தியாலயம்.
133. பா.ஷண்முகப்பிரியா, உடுப்பிட்டி மகளிர்வித்தியாலயம்.
134. றொ.செல்வின், புனித பத்திரிசியார் கல்லூரி.
135. ஆ.அர்ச்சனா, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.
136. க.பிருந்தன், இணுவில் மத்திய கல்லூரி..
137. செ.யசோதா, அராலி முருக மூர்த்தி வித்தியாலயம்.
138. இ.நிலோஜன், நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.
139. ச.சரணிகா, சென்.ஜோண் பொஸ்கோ.
140. சி.சசிக்குமார், சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை.
141. பா.சிவாயனி, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
142. த.அஜித்தா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
143. வி.கௌசிகன் -எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசவித்தியாலயம்
144. செ.நிரோஜன் -கோண்டாவில் சீ.சீ.த.க.பாடசாலை
145. ப.பிரியதர்சினி -இணுவில் இந்துக்கல்லூரி -
146. ச.மதுரா -மயிலணி சைவ மகாவித்தியாலயம்
147. கி.மகாராஜ் -துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
148. யோ.ஜசித்தா -அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
149. ஸ்ரீ. காயத்திரி -சுண்டுக்குளி மகளிர் வித்தியாலயம்
150. உ.கிரிசாந்தி -சுண்டுக்குளி மகளிர் வித்தியாலயம
151. க.கஸ்மன் - யாழ்.மத்திய கல்லூரி
152. ச.சமீரா - உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
153. ம.பிரதீபன் - மூளாய் சைவப்பிரகாச வித்தியாலம்
154. ப.திவ்வியா - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
155. க.தனுசன் - உரும்பிராய் றோ.க.த.க. பாடசலை
156. வி.சஞ்சீவன் -உரும்பிராய் றோ.க.த.க. பாடசலை
157. ஜெ.நிவிதா - யாழ்.இந்து மகளிர் ஆரம்பபாடசாலை
158. கா.விஜிகரன் - கொட்டடி நமசிவாய வித்திலயாலம்
159. கு.பவிதன் - கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
160. எ.துவாரகா - தேவரையாளி இந்துக்கல்லூரி
161. சோ.சாந்தி - உடுவில் மகளிர் கல்லூரி
162. வி.விஜேதா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
163. பி.நிதாபரன் - கரவெட்டி அ.த.க. வித்தியாலயம்
164. ச.கணேஸ்பரன் - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
165. து.சாயிவதனரூபன் - துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
166. கு.பிரஜாத் - வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
167. தி.பவிதா - காரைநகர் தியாகராசா ம.ம. வித்தியாலயம்
168. ம.நிவந்தன் - புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்'
169. ஜே.அலெக்சியஸ் நிலோஜன் - யாழ் மத்திய கல்லூரி
170. தி.துஷாரா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
171. செ. சிந்துஜன் - வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
172. ப.வானதி - அராலி இந்துக் கல்லூரி
173. ச.மஞ்சூரி - மயிலணி சைவ மகா வித்தியாலயம்
174. நி.சிவகுமார் - பெரிய புலம் மகா வித்தியாலயம்
175. அ.கரிகாலன் - தம்பசிட்டி மெ. மி. த. க. பாடசாலை
176) க.சிறிரூபி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
178) சோ.சிந்துகேயன்- யாழ் மத்திய கல்லூரி
179) ம.டிலானி- கொக்குவில் இந்துக் கல்லூரி
180) தி.துஷாந்தி- வயாவிளான் மத்திய கல்லூரி
181) இ.கணாதரன்- உடுவில் மகளிர் கல்லூரி

**அதிகூடிய புள்ளி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் நாளை வெளிவரும்**

## கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

1) வண்ணவண்ணச் சேலை கட்டி
2) வசந்த கால நிலவு
3) பாட்டுப் பாடி ஆட்டமாடி
4) ஆசிரியை
5) விளங்கிமகிழ்வுற கற்பித்தல்
6) வேம்பு
7) ஆடு
8) புகையிரதம்
9) லோங்ஸ்
10) 3
11) 1
12) 2
13) 
14) 
15) 
16) 
17) 
18) 3
19) 2
20) 1
21) 3
22) 2
23) 25 வெள்ளி
24) 3வரு 9மா 16நாள்
25) சரியானது
26) 54
27) 17
28) 24
29) 1
30) 3



32
31
33

34) ✓
35) ✗
36) ✓
✓
37)
38) கஜனி
39) துளசி
40) அனுசா

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் சிந்த விளையாட்டுக்கழகம் நடாத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.30 மணிக்கு உரும்பிராய் வைத்தீஸ்வரா விளையாட்டுக் கழகமும் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (வ)

## பூப்பந்தாட்ட இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி உள்ளக மாணவர்களுக்கிடையேயான பூப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 3.30மணிக்கு நடைபெற உள்ளது. இந் நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதியதிபர் வி.கே:கணபதிப்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் (வ)

## நாடக நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

செல்லையா மெற்றாஸ்மயில் தொகுத்து வெளியிட்ட ''மரபு வழி இசை நாடகங்கள் ஒன்பது'' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளீர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வு வடமராட்சி கிழக்கு உ.அ.அதிபர், தலைமையில் நடைபெறும். (எ)

# விபரம் புரியாது குரைக்கும் நாய்கள் குறித்து நாங்கள் அலட்டிக்கொள்ளப் போவதில்லை

## ஜோன் அமரதுங்க ஜே. வி. பிக்கு பதிலடி

(கொழும்பு)

இலங்கையில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதிகளை இலங்கை அரசாங்கம் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதித்தது ஏனென்று ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா திஸநாயக்கா கேள்வி எழுப்பியுள்ளார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

அன்ரன் பாலசிங்கம் வந்துள்ள விமானம் எந்த நாட்டுக்குரியது. இந்த விமானம் விடுதலைப் புலிகளுடையது என்பதே எனது நம்பிக்கை. இதனை உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க நிருபிப்பாரா?

இந்த விமானத்தில் எவரெவர் வந்தார்கள்? இதில் இருந்த பொருட்கள் தான் என்ன? அவை சோதனையிடப்பட்டதா? சுங்கப் பரிசோதனை இடம் பெற்றதா? அந்த விமானம் இறங்கிய பகுதிகள் சோதனையிடப்பட்டதா? அன்ரன் பாலசிங்கத்தின் வரவு ஒழுங்கு முறையானதா? போன்ற சரமாரியான கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

அனுரா திஸநாயக்காவின் கருத்தினை வழிமொழிந்து உரையாற்றிய பொதுஜன ஐக்கிய முன்னனி நாடாளுமன்ற உறுப்பினர் விஜயமுனி சொய்ஸா, அன்ரன் பாலசிங்கத்தின் வருகை முரணானது. அது பாரதூரமான ஒரு விடயமாகும். எனவே இது குறித்து உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க பாராளுமன்றில் தெரியப்படுத்த வேண்டுமென குரலெழுப்பினார்.

இதற்குப்பதிலளித்துப்பேசிய ஜோன் அமரதுங்க அரசு-விடுதலைப்புலிகள புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுகிறது. பேச்சுவார்த்தைகளில் சுதந்திரமாகப் பேசுவதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டும்.

சமாதான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக அன்ரன் பாலசிங்கம் இலங்கைக்குள் வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் பயணித்த விமானம் விமானச்சட்டங்களுக்கமைய இலங்கையில் தரையிறங்கியுள்ளது. இது தனியார் துறை விமானமாகும். இது விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கும் தெரியும்.

இலங்கையில் கிளர்ச்சிகளை மேற்கொண்ட ஜே. வி. பி. யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எவ்வாறு இலங்கையை விட்டு வெளியேறினார் எவ்வாறு இங்கு வந்தார் என்பது ஒருவருக்கும் புரியாத புதிராகவுள்ளது.

அப்பொழுது நடைபெற்ற சம்பவங்களின் போது, தற்போது நாடாளுமன்றில் உள்ள ஜே. வி. பி. யினர் சிறு பொடியன்கள். இப்பொழுது அர்த்தமற்ற கதையளக்க முயல்கின்றனர்.

நடந்து முடிந்த இரண்டு தேர்தல்களில் முழு இலங்கையும் சமாதான நடவடிக்கைகளை ஆதரித்து வாக்களித்துள்ளது.

ஜே. வி. பி. யினர் சமாதானத்தில் விருப்பில்லாது அர்த்தமற்ற கூச்சலிடுகின்றனர். இவர்கள் நாட்டை நாசமாக்கும் கூச்சலிடும் ஒரு கும்பலேயன்றி வேறு எதுவுமே இல்லை. நாய்கள் குரைத்தாலும் அதுபற்றி எமக்கு கவலையில்லை.

அன்ரன் பாலசிங்கம் இலங்கைக்குள் வருவதற்கு 1948 ஆம் ஆண்டு குடிவரவுச் சட்டத்தின் 20 ஆம் இலக்க 52 ஆம் பந்தியிலுள்ள விதிகள இடமளிக்கிறது. அன்ரன் பாலசிங்கம் நாட்டுக்குள் வருவதற்கு இடமளிக்கும் சட்டம் தெரியாது குரைத்துக் கொண்டே இருக்கிறீர்கள். அதுபற்றி நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தயக்கம் மயக்கமின்றி முன்னெடுத்துச் செல்லப்படுமென்று ஜே. வி. பி. யினரின் கேள்விகளுக்கு சாட்டையடி கொடுத்து ஜோன் அமரதுங்க தனது உரையை நிறைவு செய்து கொண்டார்.

(உ-5)

## யுத்தக்கப்பல் நுழையதடை அமெரிக்க, நியூசிலாந்து பேச்சை பாதிக்காது

(வாஷிங்டன்)

அமெரிக்க அணுவாயுத யுத்தக்கப்பல்கள் நியூசிலாந்திற்குள் நுழைவதை தடைசெய்தமையானது இருநாடுகளிடையேயும்நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையை பாதிக்காது என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1980 களின் பிற்பகுதியில் நியூசிலாந்து மேற்கொண்ட இந்த தீர்மானத்தால் அன்சல் பாதுகாப்பு உடன்படிக்கையிலிருந்து நியூசிலாந்து புறம் தள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஆப்கானிஸ்தானில் யுத்தம் செய்யவென நியூசிலாந்து தனது படைகளை அனுப்பியிருந்ததும் தெரிந்ததே. (உ-8)

## இந்நூற்றாண்டின் மாபெரும் குத்துச்சண்டைப் போட்டி அமெரிக்காவில்

(வாஷிங்டன்)

அதிபார பிரிவிற்கான உலகக் குத்துச்சண்டை சம்பியன் லெனட்லூவிட்சுக்கும் மைக்டைசனுக்கும் இடையேயான மாபெரும் குத்துச் சண்டைப் போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி அமெரிக்காவில் ரென்ஸி மாநிலத்தில் உள்ள மென்பிஸ் நகரில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் மாபெரும் குத்துச் சண்டைப் போட்டி என வர்ணிக்கப்படும் இப்போட்டிக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட லூவிட்சுக்கும், டைசனுக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக பணப் பரிசை வழங்கும் குத்துச் சண்டை போட்டியென கருதப்படும் இப்போட்டி மூலம் 2 வீரர்களும் தலா 17.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெறவுள்ளனர். (உ-9)

## கருணாநிதி வெளியிட்ட கருத்து தன்னிச்சையானது பி. ஜே. பி கருத்து

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க விற்குபி. ஜே. பி. எதிர்கட்சியே தவிர எதிரான கட்சி அல்ல என்று பி. ஜே.பியின் மாநிலத்தலைவர் கிருபாநிதி தெரிவித்துள்ளார்.

கருணாநிதி வெளிட்ட கருத்து தன்னிச்சையானது என்றும் அவர் அவசரப்பட்டு இருகட்சிகளுக்கு மிடையில் உறவு முறிந்துவிட்டதென்று அறிவித்திருக்கக்கூடாதென்றும்,

எந்தக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் பி. ஜே. பியுடன் கருனாநிதி கலந்தாலோசித்திருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்

இதற்கிடையில் மதுரையில் நடந்த கூட்டமொன்றில் தமிழக பி. ஜே. பி. பொது செயலர் இலகணேஷன் பேசுகையில் தி.மு.கவுடன்தமதுகட்சி நீடித்த உறவை வைத்திருக்கிறது என்றும்,

இந்தியா முழுவதற்கும் ஒரு பி. ஜே. பியே அல்லாமல் தமிழகத்துக்கு பிறிதானதொன்றில்லை என்று தெரிவித்தார்.

(து)

## 37 ஊடகவியலாளர் கடந்த வருடம் கொலை

(லண்டன்)

உலகளாவிய ரீதியில் கடமையிலிருந்தபோது 37ஊடகவியலாளர்கள் கடந்த வருடம் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவர்களில் அனேகமானவர்கள் தமது நாடுகளில் நடைபெறும் சீரழிவுகள், குற்றச் செயல்கள, மோசடிகள் தொடர்பாக எழுதியதனாலேயே பழிவாங்கும் நடவடிக்கையாக கொலை செய்யப்பட்டனர்.

கொலம்பியாவில் கடந்த வருடம் மாத்திரம் மூன்று ஊடகவியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது (உ-8)

## வடபகுதிக்கான ரயில் சேவையை மீண்டும் நடத்த நடவடிக்கை

### போக்குவரத்து அமைச்சர் தகவல்

(கொழும்பு)

மட்டக்களப்பு காங்கேசன் துறை மற்றும் தலை மன்னார் வரையிலான ரயில் பாதைகளை மீண்டும் அமைப்பதுடன் சேவைகளை முன்னர் போல் நடத்தவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசின் போக்குவரத்து அமைச்சர் பியகார உபாலி தெரிவித்துள்ளார்.

இந்த ரயில் பாதைகளை மீண்டும் அமைத்து சேவைகளை நடத்த சுமார் 420 கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும்.

வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையான பாதை மீண்டும் அமைக்க 220 கோடி ரூபா செலவாகும் எனவும்,

மதவாச்சி தலை மன்னார் வரையிலான ரயில் பாதையை அமைக்க 180 கோடி ரூபா செலவாகும் எனவும்,

யாழ்-கண்டி வீதி போக்குவரத்திற்காக திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைதீவு ஆகிய பிரதேசங்களிற்கான பஸ் சேவைகளை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-9)

## தமிழக அரசியல்வாதிகளும் அன்னதானமும்

(சென்னை)

தமிழக அரசின் அன்னதானத் திட்டத்தை பலகட்சிகளும் குறைகூறத் தொடங்கியுள்ளன.

அண்மையில் தமிழகக் கோயில்களில் அன்னதானம் வழங்கும்திட்டத்தை முதலமைச்சர் செல்விஜெயலலிதா ஆரம்பித்துவைத்துள்ளார்.

இதுதொடர்பாக காங்கிரஸ் கட்சி இளங்கோவன் கருத்துத் தெரிவிக்கையில்; ஒருமதத்துக்கு மாத்திரம் அன்னதானம் கொடுப்பது முறையில்லையென்றும் எல்லா மதவழிபாட்டுஇடங்களிலும் அன்னதானம் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை பாட்டாளி மக்கள்கட்சியும் கோயில்களில் அன்னதானத் திட்டத்தை குறைகூறியுள்ளது.

இதுபற்றி இந்து அறநிலை அமைச்சர் இராமசாமி கருத்துத் தெரிவிக்கையில் கோயில்களில் மதிய வேளையில் பாகுபாடுஇன்றி வருபவர்களுக்கு உணவுவழங்கப்படுவதே இந்ததிட்டமாகுமென்று தெரிவித்தார்.

இதேவேளை இது மதசார்பற்றதென்றும் உலகில்எல்லா வணக்கஸ்தலங்களிலும் அன்னதானம் வழங்கப்படுவதாகவும் ஜெயலலிதா தெரிவித்தார். (து)

## பயங்கரவாத தடுப்பு மசோதா நிறைவேறியது

(புதுடில்லி)

பயங்கரவாதத்துக்கு எதிரான தடுப்புச் சட்டத்தின் மசோதா நாடாளு மனறக் கலப்புக் கூட்டத்தில் நிறைவேறியது.

நேற்று முன்தினம் 9 மணித்தியாலம தொடர்ந்து இந்தத் தடுப்புச் சட்ட மசோதா பற்றி விவாதிக்கப்பட்டு 129 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

இந்த மசோதாவிற்கு ஆதரவாக 425 வாக்குகளும் எதிராக 296வாக்குகளும் கிடைத்தன.

இந்த விவாதத்தில் சோனியாகாந்தி பிரதமர் வாஜ்பாயைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசினார் என்ற காரணத்தால் பிரதமர் வாஜ்பாயும் சோனியாகாந்தியைத் தாக்கிப் பேசினார். இருபிரிவினருக் கிடையேயும் சிறிது நேரம் அமளி துமளி இடம் பெற்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மசோதா எந்த விதத்திலும் சிறு பான்மையினத்தவரைப் பாதிக்காது என்றும் சிறிய அரசியல் கட்சிகளுக்கு எந்த விதப்பாதிப்பும் இதனால் ஏற்படாதென்றும் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார். (து)

## 8 பேர் பலி

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகரில் ஒருவர் சரமாரியாகச் சுட்டதில் 8 பேர் பலியாகினர். 29 பேர் படுகாயமடைந்தனர்.

தலை நகர் பாரிஸின் வடக்கே பெரிய கட்டடத்திற்கு வெளியே நின்ற இனந்தெரியாத ஒருவர் சரமாரியாகச் சுட்டதில் இந்த அனர்த்தம் இடம் பெற்றது.

(து)

## செனட்டரைக் கடத்தியோர் கைது

(பொகொடா)

கொலம்பிய செனட்டர் ஒருவரைக் கடத்தியதாகக் கருதப்படும் 6 இடதுசாரி கெரில்லாக்களை அந்நாட்டு இராணுவம் கைது செய்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி நெய்வாரில்இருந்து பொகொட்டா நோக்கி சென்ற விமானத்தில் பயணம் செய்தபோது மேற்படி செனட்டர் கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ)

வண்ணை சிவன் தீர்த்தத் திருவிழா

## துன்பம் போக்கும் தீர்த்தம்

பண்டொருநாள் இராவணன்தன் பரிசு பாற்ற
அவன்பாடப் பரிந்து நாள்வாள் அளித்த எந்தாய்
வண்டுபண்செய் வார்கூந்தல் மன்னன் மங்கை
மயன்பெற்ற மகள்வேண்டும் வரமருள் மைந்த
வண்ணப்பண் ணைகள்எங்கும் மஞ்சு துஞ்ச
மறைவேள்விப் பாகம்கொள் யாபூர்த் தேவே
வண்ணார்பண் ணைத்தீர்த்தம் துதைபொற் சுண்ணப்
பொடி மகிழ்ந்தாடல் துன்பமாற்றும் சிந்தை அன்றே.

சிவ. சண்முகவடிவேல்
ஏழாலை.

உறுபசியும் ஓவாப்பிணியும் செறு
பகையும் சேராதியல்வதுநாடு

-குறள்

# வலம்புரி

## புற்றுநோய் வேகம்

யாழ். குடாநாட்டின் சுகாதார நிலை மிகவும் மோசமடைந்து விட்டது. நோய் நிலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ண முள்ளது தொற்றுநோய் மட்டுமன்றி தொற்றாத நோய்களான இருதய வியாதி, புற்றுநோய், சலரோகம் போன்றவை முதியவர்களை மட்டுமல்ல இளவயதினரையும் தாக்குகிறது. அதிலும் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துச் செல்வதாகவும் அதனால் ஏற்படுகின்ற மரணங்கள் அதிகமாக இருப்பதாகவும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்சமூக மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராஜா அவர்கள் புள்ளி விபரங்களுடன் ஆதாரப்படுத்தியுள்ளார்.

புற்றுநோயை ஆரம்பத்தில் இனங்காண்பதன் மூலம் நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் அது சார்ந்த மருத்துவ சிகிச்சை வசதிகள் இன்மையால் இந்நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதேவேளை இந்நோயால் பாதிகப் பட்டவர்களின் வறுமை நிலை அவர்களைப் பெரிதும் தாக்குகிறது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்களின் தலைமையில் இயங்கும் புற்றுநோய் தடைச் சங்கம் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரித்து வருகின்ற போதிலும் நோய்க்கான பரிசோதனைகளையும் சிகிச்சை வசதிகளையும் வழங்கக் கூடிய அடிப்படை வசதிகளை அரசோ அல்லது பொது அமைப்புகளோ வழங்க முன்வராததனால் முழுமையான தடை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இது ஒருபுறமிருக்க மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் தமிழர்கள் என்ற ஒரேகாரணத்தால் ஓரங்கட்டப்படும் புற்றுநோயாளர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. எனவே இது விடயத்தில் யாழ் வரும் அமைச்சர்கள் அக்கறைகொண்டு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை சகல வசதிகளுடனும் யாழ்ப்பாணத்தில் அமைப்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

---

### மறைந்தார் மாண்பு

# அடிஅத்திபாரமற்ற நிலாவரை நீரூற்றுப்போல்

# அற்புதமான 'கம்பியூட்டர்' மூளை கொண்ட வி.பி.

**கே. பி. நடனசிகாமணி**

நான் வடபகுதியில்இரண்டு அதிசயங்களைக்கண்டு களித்தேன். அதில் ஒன்று அடி அத்திபாரமற்ற நிலாவரை நீரூற்று. மற்றது நண்பன் வி.பி. யின் அற்புதமான சம்பியூட்டர் மூளை என்று முன்பு கல்வியமைச்சின் செயலாளராகவும், பின்னர் திறைசேரியின் செயலாளராகவும் பணி புரிந்த ஜினதாஸ சமரக்கொடியால் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி விழாவொன்றில் பகிரங்கமாகப் பாராட்டப்பட்டவர் வி.பொன்னம்பலம், கனடாவில் மாரடைப்பால் இவர் காலமான செய்திசெந்தமிழர் நெஞ்சங்களையெல்லாம் நெகிழவைத்தது. யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தன் இடை நிலைக்கல்வியை முடித்துக் கொண்டு சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை தொடர்ந்து எம்.ஏ. பட்டதாரியாக வெளியேறினார்.

**ஆசிரியப்பணி**

சுன்னாகம் ஸ்கந்தாவில் ஆசிரியப்பணியை ஆரம்பித்த இவர் பல்லாண்டுகள் அங்கே பணியாற்றிய பின்சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் சிலகாலம் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றினார். சென்னையில் கல்வி கற்கும்போதே மாக்ஸிஸ சித்தாந்தங்களால் கவரப்பட்டுஅங்குமுற்போக்கு சக்திகளுடன் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டார். இலங்கை வந்த பின்கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான பீட்டர் கெனமனுக்கு ஸ்கந்தா அதிபரான ஒறேற்றர் சுப்பிரமணியத்தால் நல்ல முறையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதை அடுத்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில்சேர்ந்து தீவிரமாகச் செயல்பட்டார். சில காலத்தின் பின் வடபிரதேசச் செயளலாராகவிருந்து அரும்பணிகள் பல புரிந்தார். இலங்கையின் இணையற்ற தமிழ்ப் பேச்சாளர்களில் ஒருவராகவும் மும்மொழிவல்லுநராகவும், மிகச்சிறந்தமொழிபெயர்ப்பாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்த வி. பொன்னம்பலம் அன்றைய அரசியல் வானில் ஒளிவீசும் தாரகையாகப் பிரகாசித்தவராவார்.

**கொள்கைப்பற்று**

நெஞ்சுரமும் நேர்மைத் திறனும் அறிவாற்றலும் எவரையும் அணைத்துச் செல்லும் அரியபண்பும் மிக்க அரசியல் அறிஞனான வி. பி. சிங்கள மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்ற தமிழ் அரசியற் பிரமுகர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார். 1956 இல் நடைபெற்ற தேர்தலில் முதன்முதலாக கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்ட வி. பி 1960 தேர்தலில் தன் அருமை நண்பரும் அன்றைய ஸ்கந்தாவின் முகாமையாளருமான வி. தருமலிங்கத்துடனேயே போட்டியிட்டதன் மூலம்தன் கொள்கைப்பற்றையும் அரசியல் நேர்மையையும் காட்டிக் கொண்டார். அளவெட்டி மல்லாகம் கிராமசபை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கசமாசம் ஆகியவற்றின் தலைவராக விருந்து, மகத்தான மக்கள் பணியாற்றியதன் மூலம் பொதுமக்களின் பெருமதிப்பையும் பெற்றுவிளங்கினார்.

**சிறந்த மொழி பெயர்ப்பான்**

வி. பி யின் அரசியற்கொள்கைகளை ஏற்காதவர்கள் கூட அவரின் பேச்சைக்கேட்பதற்குக் கூட்டங்களுக்குச் செல்வார்கள், ஒருநிமிடத்தில் மக்களைவிழுந்து விழுந்து சிரிக்கவைக்கவும், அடுத்தநிமிடத்தில் அவர்களைவிழுந்து விழுந்து அழவைக்கவும் கூடிய அற்புதமான பேச்சாற்றல் உலகத்தில் வி. பிக்கு மட்டுமே உண்டு என்று கம்யூனிஸ்ட்கட்சியின் தலைவராக விருந்தவரான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவால்விதந்து பாராட்டப்பட்டவர். ஸ்கந்தாவின் பரிசளிப்பு விழாக்களுக்கு அழைக்கப்படும் வில்மட்பெரேர, டாக்டர் ஆனந்தகுருகே, ஆனந்தாக் கல்லூரி அதிபர் எஸ். ஏ. விஜயதிலகா, ஏ. எம். ஏ. அஸீஸ், பேராசிரியர் எலியேசர் போன்ற கல்வி மான்களினதும், பீட்டர் கெனமன், கொல்வின் ஆர். டி. சில்வா, சிறிமாவோ பண்டாரநயக்கா என். எம். பெரேரா, டாக்டர் விக்கிரமசிங்கா போன்ற அரசியல் தலைவர்களினதும் சிங்கள, ஆங்கிலப் பேச்சுக்களை உடனுக்குடனும், அவர்கள் பேசி முடிந்த பின்பும், அழகாகவும், விரைவாகவும், தெளிவாகவும் ஒரு சொல் கூடத் தவற விடாமல் தமிழில் மொழி பெயர்த்துக் கூறி, மக்கள் மத்தியில்பெரும் புகழ் பெற்றிருந்தவர் வி.பி. மட்டுமே.

**கலை இலக்கிய வாதி**

அற்புதமான அறிவாற்றல் மிக்க அரசியல்வாதியாகமட்டுமன்றி கலை, இலக்கிய வாதியாகவும் திகழ்ந்த இவர் ஸ்கந்தாவில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் வித்துவான் ஆறுமுகன், மாதகல் கந்தசாமி ஆகியோருடன் இணைந்து ''கலைமதி'' என்ற மாத சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இருந்து பணியாற்றினார். வெள்ளை வேட்டியும், அரைக்கை சேட்டும் அணிந்து எப்பொழுதும் வெறுங்காலுடனே இலங்கை முழுவதும் மட்டுமல்ல, மொஸ்கோவுக்கும் கூட இரு தடவைகள் சென்று வந்தவர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் மட்டுமே அறிந்திருப்பார்கள்.

செந்தமிழர் இயக்கத்தை உருவாக்கிச் சிறிது காலம் செயற்பட்ட இவர், பின்னாளில் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தவராவார். அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகவேவிளங்கியது எனலாம், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதே நாம் அவருக்குச் செய்யக் கூடிய கைம்மாறாகும்.

நன்றி

வீரகேசரி 27 - 3 - 1994

---

# 80-வது சர்வதேச கூட்டுறவு தினப் போட்டிகள்

(கொழும்பு)

80-வது சர்வதேச கூட்டுறவாளர்தினத்தை முன்னிட்டு நாடுதழுவிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் 10,11, 12, 13 ஆண்டுமாணவர்களுக்கிடையே சித்திரம், கட்டுரை பேச்சுப் போட்டிகளை இலங்கை தேசிய கூட்டுறவு சபைநடத்தவுள்ளதாக அதன் தலைவர் லயனல் சமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகள் யாவும் மாவட்டமட்ட, மாகாண மட்டத்தில் நடைபெற்று. பின்தேசியமட்டத்தில் நடைபெறவுள்ளது, போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் சுயமாக விண்ணப்பம் தயாரித்து யாழ்மாவட்டகூட்டுறவு சபையின் செயலாளருக்கு ஏப்ரல் 10ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டிகளுக்கான கால அட்டவணைவிண்ணப்பதாரிகளுக்கும் பாடசாலைஅதிபர்களுக்கும் மாவட்ட செயலாளரினால் அனுப்பிவைக்கப்படும். (ம)

---



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (44)

**ஆண்டவரின் இராவுணவு (வெள்ளை)**

**திபா 116:12-13,15-18.''நாம் ஆசீர்வதிக்கும் கிண்ணம்கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்தல் அன்றோ''**

படைத்தவர் படைப்பின் முன் மண்டியிடுகிறார்! அதுவும் தம் ஆட்சிக்கு உட்பட்ட மனிதரின் பாதங்களைக் கழுவுவதற்காக. ஆசிரியர் தம்மாணவரின்பாதங்களை முத்தமிடுகிறார். தம் மாணவர்கள் அன்பின் பாடத்தை நெஞ்சங்களில் ஆழமாகப் பதித்துக் கொள்வதற்காக அவர்கள் தம் உடலின் சதையை உண்ணத் தருகிறார். அவர்கள் தம் மறையுடலில் அங்கம் வகிப்பதற்காக தம் உயிராகிய இரத்தத்தைக் குடிக்கச் சொல்கிறார். தம் புதிய உடன் படிக்கையின் உறவில் பங்கு கொள்வதற்காக இவையனைத்தையும் நிகழ்த்திய பின், ''என் நினைவாகச் செய்யுங்கள்'' என்றார். இந்த மாடியறை மன்றத்திலே இயேசு நிறை வேற்றிய அன்பின் புதிய சட்டம் மானிடத்தை தெய்வீக மயமாக்க வல்லது! இந்தப் பாஸ்கா உணவறையிலே அவர் காட்டிய பணிவாழ்வின் பாடம், மனித நேயம் எனும் புதிய கோணத்தைத் தந்திருக்கிறது. பலியாவதும், பணியாற்றுவதும், பரிவோடு பிறரை அன்பு செய்வதுமே இறைவனை அனுபவிக்க கிறிஸ்து தந்த ஈடில்லா வழிகளாகும்.

-காவலன்

---

## சாயி அருளமுதம்



பூரண விசுவாசத்துடன் நீங்கள் அழைக்கும் போது நிச்சயமாகப்பதில் கிடைக்கும். கீழான ஆசைகளைக் கைவிட்டு உருகும் இதயத்துடன் அழையுங்கள. நீங்கள் இப்பொழுது செய்வது போல், பூஜையறை எனப்படும் சமையற் கட்டின்ஒரு மூலையில் இருந்து உதட்டினால் பிரார்த்திக்க வேண்டாம். செய்யப்படும் பட்சணங்களின் மீது அல்லது அடுப்பில் வெந்து கொண்டிருக்கும் பதார்த்தங்களின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டும், சூடான கறிகளிலிருந்து வரும் ஆவியைப் பசியுடன் முகர்ந்து கொண்டும் இறைவனைப் பிரார்த்திக்கிறீர்கள். உணர்வு சம்பந்தமான விஷயங்களுடன் உங்களைப் பிணைத்துவைக்கும் 'விஷவாஸனாவால் இறைவனைப்பற்றிய எண்ணங்கள கெடுக்கப்படுகின்றன. நீங்கள் சொல்வதற்கும், செய்வதற்கும் இடையேயும், உங்களால் இயல்வதற்கும், செய்து நிறைவேற்றுவதற்கும், இடையேயும் நீண்ட இடைவெளியுண்டு.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

**மாவீரர்.....**

உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். பாலமுரளி தலைமையில் அஞ்சலி நிகழ்வு மாலை 3 மணிக்கு ஆரம்பமாகியது.இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த போராளி அன்பு, மற்றும் யாழ்.ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே. தவச்செல்வன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்

**புலிகளுடனான....**

மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கும் இவ் வேளையில் இருதரப்பினரும் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இத்தகைய சமாதான முயற்சிகளுக்கு தனது ஆதரவு உண்டு என்றும் அதில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (வ)


UNIVERSITY OF JAFFNA, SRILANKA

POST OF TECHNICAL OFFICER GR.II(CONTRACT)

Applications will be received by me from suitable candidates upto 25.04.2002 for the Post of Technical officer Grade II 'seg.B'(Contract Basis)

Salary : Rs.6460/-(fixed)

Qualifications.

1. (a) Three(03) G.C.E (Advanced Level) passes in science subjects in one sitting, subject Combinations(s) to be decided by the Faculty concern upon the recommendation of the Department

And

(b) Passed a Skill oriented Formal Programme of training relevant to the post of at least one year(full-time) duration or equivalent. the acceptability of the training Programme for this purpose Shall be judged by the Faculty concerned.

2. Age:- not more than 35 Years.

Selection by practical test and interview.

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/ Establishments, University of Jaffna, srilanka, either in person or by sending a money order for Rs.20/- per from. those who wish to obtain application forms by post are requested to send a money order/postal order drawn in favour of the 'Bursar, University of Jaffna' together with a self - addressed stamped envelop 23X 30 cm.in size.

Application from the University system/ Government Departments/ corporations and Statutory Boards should channel their applications through the head of respective Institution.

Application received after the Closing date will be rejected without Intimation

REGISTRAR,
University of Jaffna
Srilanka

(C/3769)


**புலிகளை.....**

கடற் படையினரின் பலத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுவதாகவும் டிஜிற்றல் தொழில் நுட்பத்தில் கடற்படையை நவீன மயப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசும் புலிகளும் சமாதான முயற்சியில் அதீத நம்பிக்கையுடன் ஈடுபட்டுள்ள இவ் வேளையில் அரசாங்க அமைச்சர் ஒருவரின் இத்தகைய கருத்து பல விதமான சந்தேகங்களை கிளப்பி விட்டுள்ளது.

அரசின் வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கு அதிக தொகை ஒதுக்கப்பட்டமை, கடற்படையினருக்கு ஆட்சேர்ப்பு மற்றும் ஆயுதக் கொள்வனவில் அரசு அக்கறை காட்டியமை, போர் நோக்கம் கருதியே என ஆய்வாளர்கள் விசனமும் அச்சமும் தெரிவித்துள்ளனர். (இ)

## யாழ்.மா.சபையின் மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பொன் விழாவையொட்டி மாநகர முதல்வர் செ.கந்தையன் தலைமையில் இன்று காலை 6.45 மணிக்கு ஐந்து மைல் மரதன் ஓட்டம் இடம்பெறவுள்ளது.

நல்லூரில் ஆரம்பமாகும் இந் நிகழ்வை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆரம்பித்து வைப்பார். (இ)


தேவை

கணனியில் ரைப் செற்றிங் தெரிந்த பெண் ஒருவர் தேவை

சந்திக்கும் நேரம் திங்கள், வெள்ளி, நாட்களில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்

தொடர்பு.
INSTITUTE OF ENGLISH EDUCATION AND COMPUTER DIVISION
121/1 அரசடி வீதி,
கந்தர்மடம்

குறிப்பு:- ஆங்கிலம் தரம் 3 முதல் O\L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன

(C/3770)

மல்லாகம்
அருள்மிகு காளிகாதேவி ஆலயம்

மல்லாகம் அருள்மிகு காளிகாதேவி ஆலய ஆலங்கார உற்சவ நிறைவு விழாவும் சங்காபிஷேகமும் பங்குனி மாதம் 14ம் திகதி (28.3.2002) வியாழக்கிழமை இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது.

காட்சி தந்தருள்வாய் காமாட்சித் தாயே
மாட்சி பெற்றுய்ய அருள் புரிவாயே
ஆட்சி செய்வாயெமை புன்னகையாலே
மீட்சி பெறுவோமே நின் திருவருளாலே

ஆக்கம்
க.மனோகரன்

விளம்பர அன்பளிப்பு:-
அச்சியந்திர தொழில் நுட்ப வல்லுனர் மு.அற்புததேவன்

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை
- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள் வெளியகம்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (பெண்கள் உள்ளகம்)
- புகைப்படப் பிடிப்பாளர். சொந்தமாக கமரா வைத்திருப்பதுடன், செய்தி சேகரிக்கக் கூடிய ஆற்றலும் இருத்தல் வேண்டும்

தகைமைகள்:-
(01)க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ், கணிதத்தில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி.
(02)க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி வயதெல்லை 20வயதுக்கும்40வயதுக்கும்இடைப்பட்டவர்கள்
(03)சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் 29.03.2002 வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்

இல 15 வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

நிர்வாகம்
வலம்புரி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
ஆலோசனைக் கூட்டம்

தலைவர்:- திரு.அ.விநாயகமூர்த்தி.எம்.பி
காலம்:- 30.03.2002 சனிக்கிழமை
காலை 9.30 மணி (புதிய நேரம்)
இடம்:- காங்கிரஸ் இல்லம்

முக்கிய விடயங்கள்

தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் பொங்குதமிழ் எழுச்சியின் வெற்றிக்கான எமது பங்களிப்புத் தொடர்பாக ஆராய்தல்
தொகுதி ரீதியாக செய்யப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

126, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(4883)

தகவல் தொழில் நுட்பப் பூங்கா
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

அன்புடன் நன்றி கூறுகின்றோம்

எமது நிறுவனத்தின் ஓராண்டுப் பூர்த்தியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் சிறப்புற நடைபெற ஆசிச் செய்தி, வாழ்த்துச்செய்தி வழங்கிய பெரியோருக்கும், விளம்பர உதவிகளை வாரி வழங்கிய அனைத்து உள்ளங்களிற்கும் மற்றும் இந்நிகழ்ச்சி சிறப்புற அமைய ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் என்றும் எமது நன்றிகள் உரித்தாகின்றன.

எம் பணியுடன் சேர்ந்து தம் பணியும் வளம்பெறுக!

தகவல் தொழில்நுட்பப் பூங்கா
பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்

உங்களுக்குத் தேவையான கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய சேவைகள் என்பவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள...



SDS COMPUTER SERVICES
No: 36,1st Floor, Station Road, Wellawatte,
Colombo -06
Tel: 553265, 075-557419
Branch:- No:178(114) Arasady Road,
Kandarmadam, Jaffna.



தில்லையம்பதியாள் துணை

தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே !

இராகம்.கல்யாணி



ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா.

ஆக்கம் அருட்கவி செம்மல் ந.வீரமணி ஐயர்
பாடியவர் கலைமாமணி T.M.சௌந்தரராஜன்



இன்று
கோண்டாவில்
தில்லையம்பதியில்
வருடாந்த பங்குனி உத்திர
சங்காபிஷேகம்.





விழா உபயம்: அரச ஊழியரும்,
ஓய்வூதியம் பெறுவோரும்.
திருக்கோயில் பரிபாலன சபை
(C/3772)

ஓம்
மின்சார இணைப்பிற்கு தேவையான அத்தனை பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் வழங்குவதற்கு
28.03.2002
இன்று காலை 9.10 தொடக்கம் 9.50 வரையுள்ள (பு.நே) சுபவேளையில் ஆரம்பிக்க இருக்கின்றார்கள்.



அபிராமி எலக்ரிக்கல்ஸ்
ABIRAMY ELECTRICALS

62/31
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.நடராஜா குடும்பத்தினர்.
(C/3771)